"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9961, திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10602, திரு. இல. வேலுசாமி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11905, திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12537, திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4749, திரு. ஆர். வைத்திலிங்கம், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5091, திரு. ஆர். சின்னசாமி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6336, திரு. சி. சண்முகவேலு, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7548, திரு. கே.எஸ். விஜயகுமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9601, திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10904, திரு. இரா. துரைக்கண்ணு.

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11245, திரு. சு.ப. வேலுமணி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11721, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7488, திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12832, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9800, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல்ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11425, திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13453, திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல்ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 103, திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்குவளையை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 432, திரு. ஞா. ஜாண் ஜோசப், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 746, திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட, ஊராட்சி சாலைகளைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 967, திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆழ்துளைக் கிணறுகள் பழுதடைந்தால் பராமரிக்க, உதவியாளர்களை கூடுதலாக நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1714, திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட வேர்கிளம்பி–குலசேகரத்துக்கு நேரடி சாலை வசதி ஏற்படுத்த மலைவிளையில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1940, திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம் வையச்சேரி ஊராட்சியிலுள்ள பொரக்குடி ஆதி திராவிடர் தெருவிற்கு, பாலத்துடன்கூடிய தார்ச் சாலை அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2292, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டத்திற்குப் புறம்பாக ஊராட்சி மன்றத்தின்

தலைவர்களே வீடு கட்ட, lay–out போட அனுமதி வழங்கிவிடுவதால், ஒழுங்கான தெரு, கால்வாய் அமைப்பு, Public purpose place போன்ற வசதிகள் இன்றி சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2525, திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் அனைத்து மயானங்களிலும் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2595, திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களிலும் விளையாட்டுப் பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2750, திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொண்டாமுத்தூர் தொகுதி, தீத்திபாளையம் முதல் செல்லப்பக்கௌண்டன் புதூர், செல்லப்பக்கௌண்டன் புதூர் முதல் குப்பனூர் சாலை வரை புதிய தார்ச் சாலை அமைப்பது குறித்தும் மற்றும் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3156, திரு. ஆர்.டி. கணேசன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3236, திரு. ந. கணபதி.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் பெரிய ஊராட்சிகளாக இருக்கும் ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4297, திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ஊராட்சிகளுக்கு சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் சி.எப்.எல். பல்புகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4317, திரு. இரா. குமரகுரு.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் கிணறு வெட்டவும், ஆழ்துளைக் கிணறு அமைத்திடவும் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4395, திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் நிலத்தடி நீர் உப்பு நீராக உள்ளதைக் குடிநீராக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4521, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கீரிப்பட்டி ஊராட்சிக்குக் கூடுதல் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4697, திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறுந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம், தலக்குளம் ஊராட்சியில் வள்ளியாற்றின் குறுக்கே அமைந்துள்ள அபாயகரமான நிலையிலுள்ள பாலத்தை மாற்றி, புதிய பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4762, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான அனைத்து கிராமப்புறச் சாலைகளும் பழுதடைந்துள்ளன; உடன் பணி நடைபெற அரசு ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5297, திருமதி ஆர். பிரேமா, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5347, திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதி, ஊராட்சிகளில் வாழும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி இலவசத் தொகுப்பு வீடுகள் அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5669, திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளில் போடப்படும் சாலைகளைத் தரமானதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6455, திரு. ஞா. செந்தமிழன்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6501, திரு. ஓ.கே. சின்னராஜ், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7027, திரு. தி. இராமசாமி.

2010 ஏப்ரல் 23]

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமைக்கோடு சம்பந்தமாக புதிய பட்டியல் தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7184, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகாத்மா காந்தி கிராமப்புற வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளை விவசாயப் பணிகளிலும் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8031, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பி.சி., எம்.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகளுக்கு வழங்கும் தொகை ரூ.60,000/– என்பதை ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8588, திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சி காரணமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வாகனங்களில் தண்ணீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8848, திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியிலுள்ள கொரடாச்சேரி ஒன்றியத்தில் கீரங்குடி ஊராட்சி–புறவாய்க்கால் சாலை 11/2 மீ. மண் சாலை, சிவெலி–எண்கண் 1 கி.மீ. மண் சாலை, இவற்றைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9286, திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வழிகாட்டு நெறிமுறைகளில், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (MPLAD) வழிகாட்டுதல்களில் உள்ளதுபோல எஸ்.சி./ எஸ்.டி. பிரிவினருக்கு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9520, திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், லெப்பைகுடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை (கழிவு நீர் வாய்க்கால்) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9633, திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் உள்ள ஊராட்சி சாலைகள் பழுதடைந்துள்ளதால் அவற்றைப் புதிய தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9896, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாகத்தில், அனைத்து ஊராட்சிகளிலும் பழைய மின் கம்பிகள் தாழ்ந்த நிலையில் மிகவும் ஆபத்தாக உள்ளன; மின் கம்பிகளை உடனடியாகச் சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10205, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் எலத்தூர், சிறுவள்ளூர், கேட்டவரம்பாளையம், வெங்கட்டம்பாளையம், கெங்கலமகாதேவி, தேவராயன்பாளையம், வீரனூர், எம்.எஸ். குப்பம், கீழ்குப்பம், சோழவரம், கீழ்பத்துரை, பூண்டி, வன்னியனூர், காலூர், பத்தியவாடி, அலங்காரமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு கூடுதலாகத் தொகுப்பு வீடுகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10248, திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், வேட்டமங்கலம் ஊராட்சி, வாங்கல குறைச்சிபாளையம் ஊராட்சி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை நிர்வாக வசதிகளுக்காக இரண்டாகப் பிரித்து புதிய ஊராட்சிகளையும், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஆண்டாங்கோவில் கீழ்பாக்கம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து புதிய ஊராட்சிகளையும் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10335, திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் அனேக கிராமங்களுக்கு மயானப் பாதை வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10341, திரு. ரா. வரதராஜன்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக்கப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல்ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10406, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு தொகுப்பு வீடுகளைப் பழுதுநீக்கம் செய்ய வேண்டி சிறப்பு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10500, திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதி, களியனூர் ஊராட்சியில் வீட்டுமனைப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் அளிப்பதில் முறைகேடுகள் நிகழாவண்ணம் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11474, திரு. எஸ். ராஜகுமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12140, திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, நம்பம்பட்டியிலிருந்து புரசம்பட்டி வழியாக நெல்லுமேட்டுபட்டி ஊராட்சி ஒன்றிய சாலையில் குறுக்கிடும் சூரளி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12269, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12652, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12684, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டத்தில் கிராமப்புறப் பஞ்சாயத்துகளில் துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,009,22,14,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,003,99,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

@ 191 முதல் 602 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I மற்றும் IIஆக அச்சிடப்பட்டுள்ளன.

முற்பகல் 10–55

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. *நான்* demand–க்குப் *போயாகிவிட்டது. (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். (குறுக்கீடுகள்) ஒருவேளை தாங்கள் கூறுவது போல அப்படிப்பட்ட சொல் இருந்தால் தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று நான் அவைத் தலைவரை உங்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* ** *என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

****மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பின்மீது எந்தக் கருத்தும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு திருத்தம்.* ** *வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.பி. அன்பழகன். (குறுக்கீடுகள்) அடிக்கடி எழுந்திருந்து நிற்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு சப்ஜெக்டிற்குப் போயாகிவிட்டது. நீங்கள்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2010 ஏப்ரல் 23] *[பேரவைத் தலைவர்]*

நீக்கச் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. இன்னும் என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்)

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகும் நீங்கள் எழுந்திருந்து நின்றால் அது முறை இல்லை, உட்காருங்கள்.*

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.அன்பழகன். ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் வேகத்தையும், பேரறிஞர் அண்ணாவின் அறிவையும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தாய் உள்ளத்தையும் ஒருங்கே பெற்று, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்கி, எனது உரையைத் துவங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற

வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் கோரிக்கை எண் 42—பக்கம் 128—இல் நிர்மல் கிராம புரஸ்கார் விருதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் என்ற விருதை மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, தமிழ்நாட்டில் 2004–2005 ஆம் ஆண்டில் 12 ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் அவ்விருதினைப் பெற்று இந்தியாவிலேயே முதலிடத்தை வகித்தது. 2005–2006 ஆம் ஆண்டில் 119 ஊராட்சிகளும், 2006–2007 ஆம் ஆண்டில் 296 ஊராட்சிகளும், 2007–2008 ஆம் ஆண்டில் 1,474 ஊராட்சிகளும், 5 ஒன்றியங்களும் இடம்பெற்றன. 2008–2009 ஆம் ஆண்டில் 196 ஊராட்சிகள் இடம்பெற்றன. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் முழுமையான சுகாதார இயக்கத் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த ஊக்கம் அளிக்கும் நோக்கத்தோடு "தூய்மையான கிராம இயக்க விருது" என்ற பெயரிலே மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசு நிர்மல் கிராம புரஸ்கார் அறிவிப்பதற்கு முன்பாக ஒரு வருடத்திற்கு 15 ஊராட்சிகளைத் தேர்வு செய்து, ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையிலேதான் மத்திய அரசு, இந்த நிர்மல் கிராம புரஸ்கார் விருது அறிவித்தவுடன் முதன்முதலிலே 38 ஊராட்சிகளிலும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலும் மத்திய அரசு மூலமாகப் பரிசுகள் வழங்குகிறபோது தமிழ்நாட்டில் 12 ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் பரிசு பெற்று இந்திய அளவிலே 35 சதவிகிதப் பரிசாக ரூபாய் 48 இலட்சத்தைப் பெற்றது. அன்று மற்ற மாநிலங்கள் எல்லாம் சேர்த்து 91 இலட்சம் ரூபாய் பெற்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தமிழகத்திலே முந்தைய காலத்தில் 12,618 கிராம ஊராட்சிகள்; இன்று 12,620 கிராம ஊராட்சிகளாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, 2008–2009

ஆம் ஆண்டில் 196 ஊராட்சிகள் மட்டும் விருது பெற்றிருக்கின்றன. ஆக, மீதம் இருக்கின்ற ஊராட்சிகள் சுகாதார வசதியை முழுமையாகப் பெறவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. 'இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் வாழ்கின்றது' என்று அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டார்கள். ஆனால், மேலே குறிப்பிட்ட புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபோது இந்த அரசுக்கும், துணை முதல்வருக்கும் கிராமப் பகுதி மக்கள்மீது அக்கறை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், எங்கள் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் முழு சுகாதாரத் திட்டம் ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே இருந்தது. 2000—2001-ல் 15 சதவிகிதமாக இருந்த முழு சுகாதாரமானது,2001—2002-ல் 19 சதவிகிதம், 2002—2003-ல் 27 சதவிகிதம், 2003—2004-ல் 40 சதவிகிதம், 2004—2005-ல் 54 சதவிகிதம் என்று உயர்ந்து கொண்டே இருந்தது. அந்தநேரத்தில் மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் ரகுவந்த் பிரசாந்த் சிங் அவர்கள் 7—5—2005 அன்று பார்வையிட்டு, ஊரக முழு சுகாதார இயக்ககம் தமிழ்நாட்டில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டதாகப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்புத் திட்டம். இந்தத் திட்டம் மத்திய அரசின்மூலமாக உருவாக்கப்பட்ட திட்டம். 3—12—2005 அன்று திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. நகர்ப்புற வளர்ச்சிக்காக இதிலிருந்து மத்திய அரசின் 90 சதவிகித மானியமும், மாநில அரசின் 10 சதவிகிதமும் அங்கே செலவழிக்கப்பட்டு, பல்வேறு வகையிலே வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, இந்த அரசானது கிராமப் பகுதி மக்கள்மீது தனி அக்கறை செலுத்தி இங்கே குறிப்பிட்டுள்ளதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மானியக் கோரிக்கை எண் 34—ல், பக்கம் 61, பத்தி 2.13—'தொற்றுநோய் மருத்துவமனை நவீனப்படுத்தப்படும்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த இடத்திலிருந்து பழைய கட்டடத்தை இடித்ததில் டெண்டர் கோரப்படாமல் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிபோய் உள்ளன. மேலும் பழமையான கட்டடங்கள் என்றால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிடம் அனுமதி பெற்று அவற்றை இடிக்க வேண்டும்; அவர்களிடமும் அனுமதி பெறவில்லை. இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்கள்

ஓர் ஆர்ப்பாட்டம் அறிவித்தவுடன் அந்தப் பகுதியின் செயற் பொறியாளரை தற்காலிக பணி நீக்கம் செய்தீர்கள். ஆகவே, இதில் முறைகேடு நடந்திருக்கிறது என்பது நிரூபணமாகிறது. இதுசம்பந்தமாக மேல் நடவடிக்கை எதுவுமில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, அதாவது 2009–2010 ஆம் ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே இருக்கும் 153 மின்சாரக் கம்பங்களில் தெரு விளக்குகள் அமைக்க வேண்டுமென்று முன்மொழிவு அனுப்பப்பட்டது. மாவட்ட நிர்வாகமானது அதைப் பரிசீலனை செய்து, அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று தெரிவித்தது. காரணம் கேட்டமைக்கு, புதிதாக கம்பம் அமைத்து அதில் நீங்கள் தெரு விளக்கு அமைக்கலாம், ஒரு கம்பத்திற்கு ரூ.9,500 நிதி இருக்கிறது என்று சொல்லி, இருக்கின்ற கம்பத்தில் தெரு விளக்குகள் அமைப்பதை அவர்கள் அங்கே அனுமதிக்கவில்லை. ரூ.2,000 செலுத்தினால் தெரு விளக்கு அமைக்கலாம் என்று கடந்த 4 ஆண்டு காலமாக பல்வேறு கிராமப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு தெரு விளக்கு அமைக்கப்பட்டது. அதை ஏன் இந்த ஆண்டு இந்த அரசு மாற்றி அமைத்திருக்கிறது என்பதைத் தெரிந்து, அதைத் தவிர்த்து, மீண்டும் கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு, ஏற்கெனவே இருக்கிற மின்சாரக் கம்பங்களில் புதிதாக தெரு விளக்குகள் அமைப்பதற்கான அனுமதியைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற மின் தடையின் காரணமாக கிராமப் பகுதிகளில் இருக்கின்ற மின் மோட்டார்கள் அவ்வப்போது பழுதாகின்றன. அவற்றை நிவர்த்தி செய்கின்ற வகையிலே ஊராட்சி மன்றத் தலைவருடைய பணிகள் இருப்பதில்லை. அதேநேரத்தில், குடிநீர்ப் பற்றாக்குறையும் இருக்கிறது. இந்த வகையில் கிராமத்தில் இருக்கிற மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மின்சாரம் சரியாக இல்லாத நேரத்தில், குறிப்பிட்ட அளவிற்கு ஒரு மின் விசை பம்ப்பினை சரி செய்வதற்கு ரூ.7,500 மட்டும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிற காலகட்டத்தில், மேலும் மின்சாரப் பிரச்சினையால் பழுதானால் அவர்கள் அதை சரி செய்வதில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு நீராதாரம் கிடைப்பது இல்லை என்பதை மனதில்கொண்டு, தனிக்கவனம் செலுத்தி, போர்க்கால

அடிப்படையிலே அந்தப் பகுதியில் இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளையில் நிலத்தடி நீரானது அதிக வறட்சி காரணமாக 100 அடிக்குக் கீழே சென்றுவிட்ட காரணத்தினால், அந்தக் கிராமப் பகுதியில் இருக்கிற கை பம்ப்பில் தண்ணீர் கிடைப்பது இல்லை. 150 அடி, 200 அடி, 300 அடிக்குக் கீழே தண்ணீர் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக இதுபோன்ற வறட்சி ஏற்பட்ட காலகட்டத்திலே, 39,796 இடங்களிலே சிறு மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. அதைக் கவனத்தில்கொண்டு சிறப்புக் கவனம் செலுத்தி கை பம்பின்மூலமாக தண்ணீர் வராத பகுதிகளிலே இதுபோன்ற சிறு மின்விசைத் திட்டத்தை அமைத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே இந்த அரசு செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III, மாண்புமிகு அம்மா அவர்கள் 19–10–2005 அன்று தொடங்கி வைத்தார்கள். உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 1,925 கோடி ரூபாய், கால அளவு 5 வருடம். இந்தத் தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி மற்றும் பேருந்து நிறுத்தம் மேம்பாடு, சாலை மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைப்பது போன்ற பணிகளுக்கு செலவழிக்கப்பட வேண்டிய தொகை. இன்றைய நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு பணிகள் இடம் பெற்றிருக்கின்றன. முக்கியத் திட்டமான பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி முடிவு பெறாமல் இருக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–ன் துணைத் திட்டங்களுக்காக கொள்முதல் மற்றும் செயலாக்கத் திட்டம் ஆகியவை திருத்தப்பட்டதன் அடிப்படையிலே இத்திட்டம் முடிவடையும் காலம் 2012 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 34–க்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 322, 323–இல் பார்க்கின்றபொழுது பாதாளச் சாக்கடைத் திட்டம்–1, பேருந்து நிலையங்கள்–3, குடிநீர் வழங்கல் திட்டங்கள்–13, சாலைகள்–17, திடக் கழிவு மேலாண்மை–32, ஆக 66 பணிகள் முடிக்கப்பட்டிருக்கிறன. இதில் பாதாளச் சாக்கடைத் திட்டம் மொத்தம் 24 மாவட்டத் தலைநகரங்களில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், அந்த தினத்திலே கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தில் 16 திட்டங்களுக்கு அனைத்துச் சிப்பங்களுக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், 7 திட்டங்களுக்குப் பகுதியான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரேயொரு பாதாளச் சாக்கடைத் திட்டம் மட்டும் நிறைவடைந்துள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வளவு காலதாமதம் ஏன்? நீட்டிக்கப்பட்டுள்ள கால அளவு துணைத் திட்டங்களுக்கு மட்டுமா அல்லது இதற்கும் பொருந்துமா? இதற்குப் பொருந்தாவிட்டால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட 5 ஆண்டு காலம் நிறைவு பெறுகிறது என்ற வகையிலே இந்த அரசுக்கு நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 34–க்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 328, 329, 330, 331 ஆகிய 4 பக்கங்களை அலங்கரிக்க வித்திட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை மாநகரில் பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய பெரிய திறந்தவெளிப் பூங்கா ஒன்றை அமைத்திட அரசு முடிவு எடுத்தது. இதன் அடிப்படையிலே பல்வேறு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, இறுதியாக “அடையார் கிரீக்” தேர்வு செய்யப்பட்டது. எனவே, மீன்வளத் துறைக்குச் சொந்தமான இந்த நிலத்தினுள் சென்னை மாநகராட்சி நுழைந்து பூங்கா அமைக்க அரசாணை வழங்கியது. ஆணை எண் 632, நாள் 22–12–2003. இவ்விடத்தின் அளவு 58 ஏக்கர். முதற்கட்டமாக இவ்விடத்திலிருந்த செடி, கொடிகள், முட்புதர்கள் அகற்றப்பட்டன. மேலும் 330 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடமாக குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டன. இவ்விடத்தைப் பாதுகாக்கும் பொருட்டு 3.55 கிலோ மீட்டர் நீளத்தில் 2.40 மீட்டர் உயரத்தில்

சுற்றுச் சுவர் கட்டத் தீர்மானிக்கப்பட்டு, நிருவாக ஒப்புகை அரசாணை எண் 278, நாள் 8–7–2004–இல் பெறப்பட்டது. சுற்றுச் சுவர் ரூபாய் 115 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இப்படி, எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுத்துகின்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களே என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் 42–க்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 198 முதல் 222 வரை. நவம்பர் 2005–லே மாண்புமிகு அம்மா அவர்களால் 6 ஆண்டு காலத் திட்டமாக உலக வங்கி உதவி பெறும் புதுவாழ்வுத் திட்டம் ரூ.717 கோடியில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அந்தத் திட்டம் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பில் கிட்டத்தட்ட 25 பக்கங்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம், ஏழையெளியோர், ஒதுக்கப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர் ஆற்றல் பெறுதல் மற்றும் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை ஏற்றுதலாகும். 31–3–2010 வரை செலவு செய்தது ரூபாய் 388 கோடியே 44 இலட்சம். 5 ஆண்டு முடிவுற்றது. மீதம் ஓராண்டு உள்ளது. மேலும், இந்தத் திட்டத்திற்கு உலக வங்கிக்கு 950 கோடி பின்தங்கியுள்ள பிற வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்த முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அப்படியென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்பதை நீங்கள் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கூறிக்கொள்கின்றேன். மேலும், தொடர்ந்து 5 ஆண்டு காலமாக இந்தத் திட்டத்தில் பணம் செலவு செய்யவில்லை, திட்டத்தை ஆரம்பிக்கவில்லை என்று கொள்கை விளக்கக் குறிப்பில் எழுதுகின்றீர்கள். இது இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுடைய வேலையா? பக்கம் 247–இல் உள்ளது, அல்லது அமைச்சர் அவர்களுடைய வேலையா? திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தேதி மற்றும் தேர்தல் அறிவிப்பு, புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றபொழுது செயல்படுத்த கால அவகாசம், இவையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இனி வருங்காலத்தில் இதைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே அறிவுறுத்திக் கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

கிராம ஊராட்சிகளில் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன என்றும், இதற்காக ஊராட்சிகளைத் தணிக்கை செய்யும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய உத்தரவு ஒன்றினை அரசு சமீபத்தில் பிறப்பித்துள்ளதாகவும், இதனை எதிர்த்து தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலக சங்கத்தினர் ஏப்ரல் 21–ல் ஒட்டுமொத்தமாக சிறு விடுப்புப் போராட்டம் நடத்தியிருப்பதாகவும் தினசரி நாளிதழில் செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது. அந்த நாளிதழ் 'தினமலர்', தேதி 21–4–2010. கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் அவர்களுக்கான நலத் திட்டங்களில் இந்த அரசு ஊழல் புரிந்துள்ளதை இச்செய்தி பறைசாற்றுகிறது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தும் நிலை குறித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான முதன்மைக் கணக்கு ஆய்வாளர் அவர்கள் தெரிவித்திருப்பது என்ன? தமிழகத்தில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் கடலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் குறித்து ஆய்வு செய்த மாநில கணக்காய்வுத் தலைவர் இத்திட்டம் சரிவர செயல்படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். 2006–2007 ஆம் ஆண்டில் வேலை அளிக்கப்பட்ட 6 இலட்சத்து 83 ஆயிரம் குடும்பங்களில் 1,824 குடும்பங்கள் மட்டுமே, அதாவது 0.27 சதவிகிதம் குடும்பங்களுக்கு மட்டுமே 100 நாட்கள் வேலை வழங்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள 99.73 சதவிகிதம் குடும்பங்களுக்கு 27 நாட்கள் மட்டுமே வேலைவாய்ப்பு தரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான 100 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதம் மீறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கத்தை அடைவதில் இந்த அரசின் இயலாமையைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த அரசின் கையாலாகாத செயலை இது பறைசாற்றுகிறது.

பெரிய திட்டங்களை இத்தனை கோடி செலவில் நிறைவேற்றுகிறோம் என்று வீணான அறிவிப்பு செய்து மக்களை ஏமாற்றுவதிலே இந்த அரசு குறியாக இருக்கிறது. இதுகுறித்து ஒரு முக்கிய விஷயத்தை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய

விரும்புகிறேன். 2007–2008 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கு மாநில அரசு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ.62,626 கோடி. ஆனால், செலவு செய்த தொகை ரூ.56,707 கோடி மட்டுமே. ஏறக்குறைய 5,919 கோடி ரூபாய் அரசிடம் பல்வேறு துறைகளால் சரண்டர் செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் ஏறக்குறைய 10 சதவிகிதத் தொகை அரசுக்கு சரண்டர் செய்யப்பட்டுள்ளது. தேவைகளை இந்த அரசு சரியாக மதிப்பீடு செய்யாததைக் குறிக்கிறது. இதை நான் கூறவில்லை. தமிழ்நாடு அரசின் கணக்குகள் குறித்து மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை அவர்கள் கூறியிருக்கின்றார்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 6 மாவட்டங்களில் ரூ.1, ரூ.2 கோடி அல்ல, ஏறக்குறைய ரூ.120 கோடியே 98 இலட்சம் அளவுக்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தகுதியற்ற இனங்களைப் பொருத்தி இணைக்கப்பட்டுள்ளதாக, காட்டப்பட்டுள்ளதாக இந்தியக் கணக்குத் துறைத் தலைவர் தனது அறிக்கையில், மார்ச் 31, 2008–ல் தெரிவித்துள்ளார். மேலும், 2006–2007 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் 754 கணக்குகள் உள்ளாட்சி தணிக்கையாக அளிக்கப்படவில்லை என்றும், தெரிவித்துள்ளார்.

சென்னிமலை கேசி. பாளையம், பெருந்துறை பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த எங்களது அம்மா அவர்களது ஆட்சியில் பிப்ரவரி 2006–ல் உருவாக்கப்பட்டது. ஆனால், மார்ச் 2006 முதல் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் ஒப்பந்தப்புள்ளிக்குக் கால நீட்டிப்பு கோரப்பட்டது. இறுதியாக பல்வேறு கால நீட்டிப்புக்குப் பின்னர் மே 2007–ல் இத்திட்டம் இறுதி செய்யப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதை அதன் கெடு தேதி முடிவுறும் முன்னரே ஒப்பந்ததாரருக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது தெரிவிக்கத் தவறியதால் ரூ.3.32 கோடி நஷ்டத்தினை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. மக்களது வரிப் பணம் இந்த அளவிற்கு வீணடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாணை நிலை எண் 38, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5–3–2008–ன்படி சுய நிதிக் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் கட்டடங்களுக்கு வீட்டு வரி நிர்ணயித்து கிராம

ஊராட்சிகள் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு உதவி பெறாத சுய நிதி பாடப் பிரிவுகளை நடத்தும் அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்களிடமிருந்து இந்த வரி வசூல் செய்யப்படுகிறது. ஆனால், நகராட்சிப் பகுதிகளில் சுய நிதியால் நடத்தப்படும் அரசு உதவி வழங்கப்படாத வகுப்புகளுக்காக நடத்தப்படும் தனியார் பள்ளிகள் இந்த சொத்து வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை. இந்தப் பள்ளிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தப் பாரபட்சம்? ஒரு கண்ணுக்கு வெண்ணை, இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பா என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி–கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமானது நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்தப் பகுதி மக்களுடைய ஏக்கத்திற்காக 1986–ல் தருமபுரியில் ஒகேனக்கல் கோட்டம் அமைக்கப்பட்டு, 5 ஒன்றியங்கள் மட்டும் செயல்படுத்த ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுப் பணிகள் முடிந்து மேற்பார்வைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர், வேலூர் அவர்களின் பரிந்துரையின் பேரிலே சுமார் 120 கோடி ரூபாய்க்கு இத்திட்டத்தினை தொழில்நுட்பக் குழுமத்தின் அனுமதி பெற்று வாரிய ஒப்புதலுக்காக 1988–ல் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. அதற்கு அடுத்தகட்டமாக 1998–லே மாண்புமிகு இன்றைய தமிழக முதல்வர், அன்றைக்கு முதல்வராக இருந்தபோது தருமபுரி மாவட்ட வருகையின்போது காரிமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை உலக வங்கி நிதியுதவி கிடைக்காதபட்சத்தில் அரசே இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தினை பகுதிப் பகுதியாக செயல்படுத்துமென்று அறிவித்தார். அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தருமபுரி–கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டத்தில் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் 18–லும் 6,755 குடியிருப்புகளுக்குத் திட்ட மதிப்பீடு ரூபாய் 1,005 கோடியில் போடப்பட்டு, மத்திய அரசுக்கு ஜப்பான் நிதி உதவி பெறுவதற்காக 18–8–2005–லே பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கடுத்த கட்டமாக, இன்றைய முதல்வர் 26–2–2008–லே ரூபாய் 1,334 கோடியில் தருமபுரியிலே வந்து இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா செய்தார்கள். இன்றையதினத்திலே பார்க்கின்றபோது, ரூபாய் 1,929 கோடியிலே திட்ட மதிப்பீடானது மாறியிருக்கின்றது.

இதையெல்லாம் உற்று நோக்குகின்றபோதும், பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கின்றபோதும், 'ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இதோ ஆரம்பித்துவிட்டோம், அடிக்கல் நாட்டிவிட்டோம், இத்திட்டம் ஓரிரு ஆண்டுகளில் முடிந்துவிடும்' என்று இந்த அரசு அறிவிக்கிறது. ஆனால், உண்மை நிலவரம் என்ன? கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் திரு. பசவராஜ் பொம்மை அவர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றுவதை எதிர்த்து சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறுகின்றார். 'தினமணி' சென்னைப் பதிப்பில் 20–4–2010 அன்று "காவிரி ஆற்றிலிருந்து பெண்ணாறுக்கு மாற்றி திட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து இதுவரை இரு மாநில அரசுகளும் பேசவில்லை. மத்திய அரசு இந்த விஷயத்தில் தலையிட வேண்டுமென்று அவர் தெரிவித்திருக்கின்றார். அரசியல் ரீதியாகத் தீர்வு காண முடியாத இந்த விவகாரத்தை சட்ட ரீதியாக கர்நாடக அரசு எதிர்கொள்ளும் என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, நடப்பது என்ன என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்." அதே வேளையில். . . (குறுக்கீடு)

(முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

நகராட்சியிலிருந்து மாடம்பாக்கம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இதையெல்லாம் ஒன்றிணைத்து ஒரே மாதிரியான நிலையைக் கொண்டு வந்தால், மாநகராட்சியாக மாற்றினால், திடக் கழிவு மேலாண்மைக்கும், கழிவு நீர் அகற்றுவதற்கும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, அம்பத்தூரைச் சுற்றியிருக்கிற பகுதி, அம்பத்தூர் வட்டத்தைச் சுற்றியிருக்கிற அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் இணைத்து, அம்பத்தூரை மாநகராட்சியாக மாற்றினால், அந்தப் பகுதியில் இருக்கிற பிரச்சினையைத் தீர்க்க முடியும். மதுரவாயல் போன்ற பகுதிகளுக்கெல்லாம் தனித் தனியாகத் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். குடிநீர் வசதி, கழிவு நீர் அகற்றுவது போன்ற திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். இவற்றையெல்லாம் ஒன்றிணைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, நகரங்களில் போக்குவரத்து நெரிசல் என்பது மாநகரத்தில் மட்டுமல்ல நகராட்சியிலும் இருக்கிறது. இதற்கு முழுமையான காரணம் என்னவென்று சொன்னால், இப்பொழுது பெரும் சாலைகளை அகலப்படுத்த வேண்டும் அல்லது புதியதாக குறுகலான சாலைகளை, பக்கத்திலே இருக்கின்ற சாலைகளுக்கு ஒருவழிப் பாதையாக மாற்றுவது போன்ற திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சென்னை மாநகராட்சிப் பள்ளி என்ற பெயரில் இயங்கி வந்த பள்ளிகள் தற்பொழுது மாநகராட்சிப் பள்ளிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சி என்று சொன்னால், அது நன்றாக இருக்கும் என்று பொது மக்கள் சொல்கிறார்கள். ஏனென்றால், சென்னையிலே படிக்கின்ற மாணவர்கள் சென்னை மாநகராட்சியிலே படிக்கிறேன் என்ற ஒரு நல்ல தெம்போடு படிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, சென்னை மாநகராட்சிப் பள்ளி என்று மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, முழு சுகாதாரத் திட்டம். இன்றைக்கு தனிநபர் கழிவறைகளெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. முழு சுகாதாரத்

திட்டம் இன்றைக்கு அனைத்து ஊராட்சிகளுக்கும், அனைத்துக் கிராமங்களுக்கும், வீடுகளுக்கும் தேவை. ஆனால், அந்தத் திட்டங்களுக்குக் கொடுக்கப்படுகிற நிதி ஆதாரம் இரண்டாயிரத்து சொச்சம் என்று இருக்கிறது. இது போதவில்லை. அங்கு வெறும் sanitary பொருட்கள் மட்டும் வாங்கி வைத்தால் போதாது. ஏனென்றால், கிராமங்களில் பொருளாதார நெருக்கடி இருக்கிறது. எனவே, அந்தக் கழிவுகளைச் சேமிப்பதற்கான தொட்டிகளையும் கட்ட வேண்டும். இதுபோன்ற பணிகளைச் செய்வதற்கு கூடுதலான நிதியை ஒதுக்கி, அதற்குத் திட்ட மதிப்பீடு தயாரித்து, ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சம் வீடுகளுக்குப் பண்ண வேண்டுமென்று இலக்கு வைக்கிறோம். அதிலே 50,000 வீடுகளுக்குப் பண்ணினால்கூட பரவாயில்லை. நிரந்தரமான கழிவறைகளைக் கட்டினால், அவர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். இன்றைக்குப் பெயரளவிலே கட்டிவிட்டோம். அங்கேயிருக்கிற B.D.O., அல்லது Engineer-ஐயோ அல்லது அங்கே technical side-ல் இருக்கிறவர்களையோ கேட்டால், வைத்துவிட்டோம், அவ்வளவுதான் முடிந்துவிட்டது என்கிற நிலைமை உள்ளது. அது முழுமையாகப் பயன்பெறவில்லை. எனவே, இதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் கருத்தில்கொண்டு, தனி நபர் கழிவறைகளை முழுமையாக அமைத்துக்கொள்வதற்கான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

இப்பொழுது தமிழகத்தில் பல்வேறு பேரூராட்சிகள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. ஆனால், பேரூராட்சிகளில் norms-படி ஊழியர்கள் இருக்கிறார்கள். மூன்றாம் நிலை நகராட்சிக்கு norms-படி ஊழியர்களை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு மறைமலை நகர் நகராட்சி வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகராட்சியாக, சென்னைக்கு அடுத்து புறநகர்ப் பகுதியில் இருந்துகொண்டிக்கிறது. அந்த நகராட்சிக்குப் போதிய இடமிருக்கிறது. ஏனென்று சொன்னால், 52 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நகராட்சியாக இருக்கிறது. போதிய நிதியிருக்கிறது. ஆனால், அங்கே ஊழியர்கள் மிகக் குறைவாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை சிறப்பு நிலை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய செங்கல்பட்டு நகராட்சியைப் பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது இடியாப்பச் சிக்கல் நிறைந்த நகராட்சியாக இருந்துகொண்டிருக்கின்றது. செங்கல்பட்டு நகராட்சி செயலிழந்து, மிக மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கின்றது. குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை, ஏற்கெனவே சொன்னேன்.

அதேபோன்று, திடக் கழிவு மேலாண்மை சரியாகச் செய்ய முடியவில்லை. விளக்குகள் சரியாக எரிவதில்லை. இப்படி அடிப்படைத் தேவைகளே இல்லை. அங்கு இருக்கிற அதிகாரிகளும் மிக மெத்தனமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். முதன்மையாக இருக்கிற ஒரு அதிகாரி அங்கே வேலைக்கு வருவதேயில்லை. உடனடியாக சிறந்த ஒரு நிருவாக அதிகாரியை நியமிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கட்சிகளைப் பார்க்க வேண்டாம். அங்கு இருக்கிற மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் உள்ளன. எனவே, அவற்றை உடனடியாகச் செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயிருக்கிற பிரச்சினைகளை உடனடியாக உயரதிகாரிகளும், நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் தலையிட்டு— செங்கல்பட்டு நகராட்சி என்பது பழமையான நகராட்சி. காஞ்சிபுரம் மாவட்டத்திலே, காஞ்சிபுரத்திற்கு அடுத்து மிகப் பெரிய நகராட்சியாக இருந்தது. பாரம்பரிய வரலாற்றுச் சிறப்புமிக்க நகராட்சி இன்றைக்கு மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம்—இந்த நகராட்சியை சிறப்பாக இயக்க வேண்டும். அங்கே குடி தண்ணீர் பிரச்சினை. பாலாற்றங்கரைமீது இன்றைக்கு நகராட்சி இருக்கிறது. பாலாறு சென்னை மாவட்டத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறது, ஆனால் செங்கல்பட்டு நகரத்திற்குத் தண்ணீரே போதவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வருகிறது. இதை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கவனத்தில் எடுத்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: தொகுதிப் பிரச்சினைதான், வேறொன்றும் இல்லை. மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்

இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் சமத்துவபுரம் இல்லை. மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், செங்கல்பட்டு தொகுதியிலே சமத்துவபுரத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புறவழிச் சாலைகளிலே புளிப்பாக்கம் சந்திப்பில் விரைவுப் பேருந்துகள் நின்று செல்ல ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருக்கழுக்குன்றம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்பாக்கம் அணுமின் நிலையக் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஊராட்சிகளான புதுப்பட்டினம், சதுரங்கப்பட்டினம் ஆகிய ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே இருக்கிற நகரின் மையப் பகுதியாக இருக்கிற போக்குவரத்துப் பணிமனை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தப் போக்குவரத்துப் பணிமனையால் அங்கே ஏராளமான வாகன நெரிசல் ஏற்படுகிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் போக்குவதற்கு ஆலப்பாக்கம் பகுதியிலே ஏற்கெனவே நான் அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். 5 ஏக்கர் நிலமிருக்கிறது, அதில் அந்தப் பணிமனையை மாற்றினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

அதேபோன்று மாமல்லபுரத்திலே பேருந்து நிலையம் அமைக்கும் பணி உடனடியாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வழியாக திருக்கழுக்குன்றம், தாம்பரத்திலிருந்து மணப்பாக்கம், தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வழியாக பொன்விளைந்தகளத்தூர் ஆகிய பகுதிகளுக்கு மாநகரப் பேருந்துகளை இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு I.T.I.–ல் சுற்றுச் சுவர் இல்லை. அந்த I.T.I. அதிக பரப்பளவு கொண்டதாக இருக்கிறது. ஆனால், அதற்கான மதிற்சுவர் அமைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. கி. ஆறுமுகம்: *சீக்கிரம் முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். என்னுடைய திருக்கழுக்குன்றம் தொகுதியிலே இருக்கின்ற நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. அது மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும், மாமல்லபுரத்தில் சிற்பிகள் பூங்கா அமைக்கப்படுமென்று அறிவித்தீர்கள். அது இன்னும் அமைக்கப்படவில்லை. அதனை அமைத்துத் தருமாறு நான் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாமல்லபுரத்திலே சிற்பக் கலை அழியுமோ என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், 8-வது படித்த மாணவர்கள்கூட, டிப்ளமோ படித்துவிட்டு வந்தவர்கள்தான் இன்றைக்கு அங்கே சிற்பக் கலைக்கூடங்களை வைத்திருக்கிறார்கள். அங்கே 300-க்கும் மேற்பட்ட சிற்பக் கலைக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கேயிருந்த டிப்ளமோ படிப்பு எடுக்கப்பட்டுவிட்டது. இன்றைக்குத் தரம் உயர்த்துகிறோம் என்ற நிலையிலே, அங்கேயிருக்கிற ஒரு சில பேராசிரியர்கள் அதற்குக் கருத்துரு அனுப்பி, இன்றைக்கு அதைக் கல்லூரியாக மாற்றிவிட்டார்கள். ஆனால், எட்டாவது படித்தவர்கள்கூட சிற்பக் கலையிலே வல்லுநர்களாக வந்தவர்கள்தான் இன்றைக்கு வெளிநாடுகளிலே ஏராளமாகப் பணியாற்றுகிறார்கள். இங்கிருந்து கோடிக்கணக்கான. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. கி. ஆறுமுகம்: *கடைசி; அவ்வளவுதான், முடித்துவிடுகிறேன். இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் வருகிற சிற்பக் கலைத் தொழில் அழியுமோ என்ற எண்ணமிருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அதில் சிறப்புக் கவனம் செலுத்தி, அங்கே டிப்ளமோ படிப்புக்கு ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் திமிரி பேரூராட்சிக்கு பஸ் நிலையம் இல்லை. இது*

நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. எனவே, இந்த ஆண்டே பஸ் நிலையம் அமைக்குமாறு கேட்டு, இந்த வாய்ப்பினை நல்கிய அனைவருக்கும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள். 10 நிமிடங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) டாக்டர் (திருமதி) காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் ஒரு மிகப் பெரிய நீண்ட பட்டியலைச் சொல்லி, இவர்கள் எல்லோரும் துணை முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். எப்பொழுதும் பெண்களை விட்டுவிடுவதுபோல் இந்தத் தடவையும் அவர் விட்டுவிட்டார். ஆகையால் நான் சொல்கிறேன். பெண் சட்டமன்ற உறுப்பினர்களும் அவரைப் பாராட்டிக்கொண்டுதான் இருக்கின்றோம். அதைவிட மிக முக்கியமாக, இந்தத் தமிழகத்திலுள்ள சுய உதவிக் குழுவில் உள்ள பெண்கள் எல்லோரும், 3 கோடிப் பெண்களும் அவர் பக்கம்தான் இருக்கின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, முந்தைய ஆட்சியில் S.S.T. training–க்கு அவர்கள் எல்லோருக்கும் 7 ரூபாய் வழங்கப்பட்டது. இன்றையதினம் 45 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல் சுழல் நிதி, அது 6 மாதம் ஆன குழுக்களுக்கு 10,000 ரூபாயாக துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோல், ஏராளமான loan facilities. ஆகையால் பெண்கள் எல்லோரும் பாராட்டிக்கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பின்பு, ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், கிராமச் சாலைகளையும் உள்ளாட்சி நிர்வாகமே செய்யும் என்று உத்தரவிட்டீர்கள். அதன்படி இன்றைக்கு தமிழகத்திலே பல ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி இல்லாமல்

பல கிராமச் சாலைகளைச் செய்ய முடியாத சூழ்நிலையிருக்கிறது. அதற்கு பாரத் நிர்மாண் திட்டத்திலும், நபார்டு வங்கியின்மூலமும் செய்யலாம் என்று கூறுவார்கள். அதற்குப் பல விதிமுறைகள் தடுக்கின்றன. இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இடையே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செய்வீர்களா, செய்யமாட்டீர்களா என்று கேளுங்கள்.

திரு. போ. சின்னப்பன்: இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையிலுள்ள சாலைகளைச் செய்யமுடியவில்லை. இரண்டு மாவட்டங்களுக்கிடையிலுள்ள சாலைகளைச் செய்யமுடியவில்லை. ஆகையால் (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலே நெடுஞ்சாலைத் துறை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: இப்பொழுது நேரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். அப்பொழுது கூப்பிட்டதிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ளவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் கரெக்டாக எழுதியிருக்கிறேன். ஆனால் நீங்கள் 10 நிமிடங்களில் முடிக்கவேண்டும். அதுதான் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம்.

திரு. சி. கோவிந்தசாமி: நான் இரண்டு நாட்களுக்கு சேர்ந்து ஒரே ஆள்தான். அதனால் இரண்டு நிமிடங்கள் சேர்த்து கூடுதலாக கொடுக்கவேண்டுமென்று முதலிலேயே விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜனநாயகத்தில் எல்லோருக்கும்தான் நேரம்.

***திரு. சி. கோவிந்தசாமி:** ஜனநாயகப்பூர்வமாகவே கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இங்கே சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த உள்ளாட்சி அமைப்பில் பொதுவாக ஒரு பெரும் முன்னேற்றம் உருவாக்க வேண்டுமென்பதற்காக

முனைப்போடு செயலாற்றி வருகிற நம்முடைய துணை முதல்வர் அவர்களுக்கு முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, நம்முடைய நகர்ப்புற ஊராட்சிப் பகுதிகளில் இன்றைய தேவைக்கேற்ப ஒரு புதிய சட்டம் உருவாக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 1994 ஆம் ஆண்டு ஊராட்சிப் பகுதிகளுக்கென ஒரு தனிச் சட்டம் உருவாக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் உருவாக்கிய நகர்பாலிகா சட்டத்தைத் தொடர்ந்து தமிழகத்திற்கு ஏற்ற உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகளுக்கான ஒரு சட்டம் தேவைப்படுகிறது. அதைக் கொண்டு வர முயற்சி நடந்து இடையிலே அது நின்றுவிட்டதாக அறிகிறேன். ஆகவே இன்றும்கூட 1919 ஆம் ஆண்டு சட்டம்தான் சென்னை மாநகராட்சிக்கும்; 1920 ஆம் ஆண்டு சட்டம்தான் தமிழ்நாட்டினுடைய இதர மாநகராட்சி, நகராட்சிகளுக்கும் இருக்கிறது. அதை மாற்றி ஒரு புதிய சட்டம் கொண்டுவரவேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது மாநில வரி வருவாயில் 10 சதவிகிதம் உள்ளாட்சிப் அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக, ஏற்கெனவே முறையாகக் கிடைத்த கேளிக்கை வரி, முத்திரைத்தாள், பத்திரப் பதிவு போன்ற வரிகள் முறையாக இன்றையதினம் அவற்றுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, கிடைக்கும் அந்த 10 சதவிகிதம் தொகையும்கூட நேராக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைப்பதில்லை. மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கப்படுகிறது. மாவட்ட நிர்வாகம் மின்சாரக் கட்டணம் போன்ற பல்வேறு பழைய பாக்கிகளையெல்லாம் பிடித்துக்கொண்டு மீதியிருந்தால்தான் ஊராட்சிப் பகுதிகளுக்கு நிதி வழங்குகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அரசு, நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய மூன்றாவது நிதி கமிஷன் பரிந்துரை செய்த அடிப்படையிலே நிதியும், அதிகாரமும் ஊராட்சி அமைப்புகளுக்கு குறைவாக இருக்கிறது என்பதை கவனத்தில்கொண்டு மாநில அரசினுடைய வரி வருவாயில் 30 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—20

உள்ளாட்சி நிதியில் பெரும் பகுதி ஊழியர்களுடைய ஊதியத்திற்கே செலவிட வேண்டிய நிலைமை இன்றைக்கு நிலவி வருகிறது. பல ஊராட்சிகளில் ஊதியம்கூட வழங்க முடியாத

நிலையால் ஊழியர்களும் பாதிக்கப்படுகிறார்கள், பணிகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே, உள்ளாட்சியில் பணியாற்றுகிற ஊழியர்கள் அனைவருக்கும் அரசே ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பட்டியல் உண்மையிலேயே அது முழுமையான குளறுபடியான ஒரு பட்டியலாகத்தான் தற்போது இருக்கிறது. அரசு நலத் திட்டங்களை ஏராளமாக அறிவிக்கிறீர்கள். அந்த நலத் திட்டங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு இந்த வறுமைக்கோட்டுப் பட்டியல் பெரும் தடையாக இருக்கிறது. ஆகவே புதியதாக உள்ளாட்சி அமைப்புகளின்மூலமாகவே முறையான ஒரு பட்டியல் தயாரித்து, அரசு நலத் திட்ட உதவிகள் முறையாகப் போய்ச் சேர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிகளில் ஓர் ஊழலற்ற நிர்வாகத்தை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி தலைமையில் ஊழல் தடுப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். கேரளாவில் அதுபோன்ற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அது உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அதிகாரிகள் உள்ளிட்டு வருகிற குற்றச்சாட்டுகளை விசாரித்து, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க அது பயன்படும். அதற்குரிய ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உள்ளாட்சித் தேர்தல்கள் நேர்மையாகவும், அமைதியாகவும் நடப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நகராட்சித் தலைவர், பேரூராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுடைய தலைவர்களை மக்களே நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு நடைமுறையைக் கொண்டு வருவதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளும், அதில் பணியாற்றுகிற அதிகாரிகளும், ஊழியர்களும் எங்கெல்லாம் ஒருங்கிணைந்து செயல்படுகிறார்களோ, அங்கே முறையான பணிகளை மேற்கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் வருகின்ற சில செய்திகள் வருத்தம் அளிப்பதாக இருக்கின்றன.

திருவொற்றியூரில் நகராட்சித் தலைவர் அந்த அவைக்குள்ளேயே தாக்கப்படுகிறார். திண்டுக்கல்லிலே தலைவர் ஊழியரைத் தாக்குகிறார் என்ற செய்திகளெல்லாம் உண்மையிலேயே மிகுந்த வேதனை அளிக்கக்கூடியது, வருத்தம் அளிக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் தடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக்கு அடுத்ததாக ஒரு பெரும் நகரமாக இருக்கிற மதுரை மாநகராட்சி மிகப் பெரிய நிதி நெருக்கடியில் சிக்கி உள்ளதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, அரசு அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி குடிநீர்த் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டம். இன்னும் தொடங்கப்படாத நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. திருவொற்றியூரில் 80 கோடி ரூபாயில் அறிவிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்படத் துவங்கவில்லை. விரைந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில், களியக்காவிளை, ஏழுதேசம், கொல்லங்கோடு ஆகிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக 16.25 கோடி ரூபாயில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்தப் பணி இன்னும் துவங்காமல் இருக்கிறது. உடனடியாக அதைத் துவங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் ஒரு மிகக் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் ஆங்காங்கே தன்னெழுச்சியாக, சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 10 நாள், 15 நாள், சில இடங்களில் 20 நாளுக்கு ஒரு முறை தண்ணீர் விநியோகம் செய்கிற நிலைகூட இருக்கிறது. ஆகவே, இந்த வறட்சிக் காலத்தில் 5 ரூபாய்க்கு ஒரு குடம் தண்ணீர் விலைக்கு வாங்குகிற ஒரு நிலை தமிழகத்தில் சில இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில் இதில் தலையிட்டு, குடிநீர்ப் பிரச்சினைக்குரிய தீர்வு காண வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, குடியாத்தம் நகராட்சிக்கும், நாகப்பட்டினம் நகராட்சிக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் இன்னும் துவக்கப்படாத நிலை நீடிக்கிறது. ஆகவே, அரசு அறிவித்த நாகப்பட்டினம், குடியாத்தம் இந்த இரண்டு நகராட்சிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை உடனடியாகத் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பல்வேறு நகரங்களில் பாதாளச் சாக்கடைக்காக சாலைகள் தோண்டப்பட்டு, குண்டும், குழியுமாகக் காட்சியளிக்கின்றன. அந்தப் பாதாளச் சாக்கடைப் பணிகள் மிக மந்தமாக நடைபெறுகிற இடங்களில் முழுமையாக அந்தப் பணிகள் முடிந்தால்தான் சாலைகள் போடப்படும் என்ற நிலையில் பல இடங்களில் குண்டும், குழியுமாக, புழுதிப் படலமாக, திண்டுக்கல் உட்பட பல்வேறு நகரங்களில் இருக்கிறது. ஆகவே, பணி முடிந்த பகுதிகளில் அந்த இடங்களிலே தார்ச் சாலைகள் அமைத்து, பொது மக்கள் படுகிற சிரமங்களுக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர் இணைப்புக்காகவும், பாதாளச் சாக்கடை இணைப்புக்காகவும் சென்னை மாநகராட்சியிலே ஒரு வாடிக்கையாளர், வீட்டு உரிமையாளரிடத்திலே அதற்கான கட்டணம் 100 ரூபாய் என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. ஆனால் மற்ற நகரங்களில் அதற்கான வைப்புத் தொகை என்ற பெயரால் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரை இன்றைக்கு வசூல் செய்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டுக்கும் இடையில் சென்னைக்கு ஒரு மாதிரியும், மற்ற பகுதிகளுக்கு வேறு மாதிரியாகவும் இருப்பது ஏன்? இந்த இடர்பாடுகள் நீக்கப்பட வேண்டும். மற்ற பகுதி மக்களுக்கும் இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

மயான உதவியாளர்கள், அதாவது வெட்டியான் என்று இருப்பவர்களை மயான உதவியாளர் என்று ஒரு பணியிடம் உருவாக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியிலே அந்தப் பணி வழங்கியுள்ளீர்கள். அதற்காக நன்றி. ஆனால் அதைத் தமிழ்நாட்டிலுள்ள இதர நகரப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர் முழுக்க சுகாதாரமாக வைத்துக்கொள்ளக்கூடிய துப்புரவுப் பணியாளர்களுடைய வாழ்க்கை மோசமான நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு கிராமப்புறங்களிலே, பேரூராட்சிப் பகுதிகளில் அல்லது மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளிலேயெல்லாம் கிடைக்கிற ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே அந்தத் துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வைப் பாதுகாக்க, முறையான ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, இன்றைக்கு 49 மூன்றாம் நிலை நகராட்சிகளை உருவாக்கியிருக்கிறீர்கள். நல்லது. ஆனால் அப்படி உருவாக்கப்பட்ட அந்த மூன்றாம் நிலை நகராட்சிகள், பேரூராட்சிகள் என்ற நிலையிலேதான் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கென்று தனி ஆணையர் நியமனம் இல்லை. அதற்கான கூடுதல் ஊழியர்களும் இல்லாத நிலையில், அறிவிப்பு மூன்றாம் நிலை நகராட்சி என்ற நிலையில் இருந்தாலும், பேரூராட்சி என்ற நிலையிலேதான் இன்றைக்கு அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கான ஆணையர்களையும், ஊழியர்களையும் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டினுடைய பிற நகரப் பகுதிகளில் (மணியடிக்கப்பெற்றது) sorry. இப்போதுதான் ஆரம்பித்தேன். நீங்கள் பழைய கணக்கை வைத்துவிட்டீர்கள். அதைத்தான் நான் உங்களிடம் சொன்னேன். இரண்டாவது தடவை கூப்பிடும்போது இருந்த அந்த நேரத்தை வைத்துக்கொள்ளுங்கள். கிட்டத்தட்ட 27 நகராட்சிகளுக்கு ஆணையர்கள் இல்லாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பணியிடங்களில் ஆணையர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மண்டலங்கள் 35 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்டவை. ஆகவே ஏழு மண்டலங்கள் இன்றுள்ள நிலையில் போதுமானதல்ல. அவற்றை அதிகப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராம ஊராட்சியில் தெரு விளக்கு அமைக்கின்றபோது, அதற்கான மின் கம்பங்கள் அமைப்பதற்குக் கூடுதலான கட்டணம் கேட்கிறார்கள். ஆகவே அந்தக் கட்டணத்தை அவர்களால் முழுமையாகச் செலுத்த முடியவில்லை.

அரசே அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மகாத்மா காந்தி கிராமப்புற வேலையுறுதித் திட்டம் இன்றைக்கு 100 ரூபாய் வழங்கிக் கொண்டிருப்பதை உயர்த்தி வழங்குவது நல்லது. ஆனால், தமிழகம் முழுவதும் அதை முறையாக இன்னும் எல்லா இடங்களிலும் அமலாக்காத குறைபாடுகள் இருக்கின்றன. அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப ஆய்வு செய்து, அந்தக் கூலி முறையாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, நகரப் பகுதிகளுக்கும் அதை விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியம் 1972–லே துவக்கப்பட்டது. எண்பது சதமான மக்களுக்குக் குடிநீர் வழங்கக்கூடிய ஒரு நல்ல துறை அது. அது தொடர்ந்து நீடிக்குமா என்ற ஒரு கேள்வி எழுந்து வருகிறது. அந்தத் துறைக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல ஊழியர்களுடைய—ஊராட்சி நலப் பணியாளர்கள், அவர்களுடைய உதவியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், அவர்களுக்குரிய படிகளை இன்றையதினம் முறைப்படுத்த வேண்டும். ஊதிய உயர்வு, இதர சலுகைகள் வழங்க வேண்டும். ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களுடைய கோரிக்கைகளை, அழைத்துப் பேசித் தீர்வு காண வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிப் பகுதிகளில் (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம், தொகுதி சம்பந்தமாக சொல்லி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பெரிய தொகுதி.

திரு. சி. கோவிந்தசாமி: பெரிய தொகுதி, அதனால் இரண்டு நிமிடம் கூடுதலாகக் கொடுங்கள். பெரிய தொகுதி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, முடியாது.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், நான் உள்ளபடியே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநகராட்சியாக உருவாக்கி, அந்த அங்கீகரிக்கப்படாத மனைப்

பிரிவில் வாழுகிற மக்களுக்கு, சாக்கடையின் மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு ஒரு விமோசனம் வேண்டுமென்று கேட்டபொழுது, நம்முடைய துணை முதல்வர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஒரு தீர்வை உருவாக்கி, மாநகராட்சியில் பணம் இல்லாதபொழுது, நாற்பது கோடி ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கி, இன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே சாக்கடையிலிருந்து வந்த மக்களுக்கு ஒரு விடிவு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அந்த மக்களின் சார்பாகவும், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், எனது சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம்.

அதுபோல, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் திருப்பூரையும் சேர்க்க வேண்டுமென்று நம்முடைய துணை முதல்வரிடத்திலே நேரிலே கேட்டிருக்கிறேன். அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய பதிலுரையில் அந்த அறிவிப்பு எல்லாம் வரும் என்ற நம்பிக்கையோடு அதற்கும் சேர்த்து நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்காவது குடிநீர்த் திட்டம், தெற்குப் பகுதியில் ஒரு புதிய பேருந்து நிலையம், நொய்யலாறு, அதனுடைய ஓடைகளைத் தூய்மைப்படுத்துவது, மேம்பாலங்களை அமைப்பது, திருப்பூரினுடைய போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்கு சென்னையைப்போல் சாலை சந்திப்புகளில் சில மேம்பாலங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டு, தருமபுரி மாவட்டம், அரூர் நகரை நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடியுங்கள். இதற்கும், அதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? திருப்பூருக்குக் கேட்டீர்கள், நியாயம். (குறுக்கீடு) சரி, உரையை முடித்து விடுங்கள்.

திரு. சி. கோவிந்தசாமி: முடித்துவிட்டேன். ஆகவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு, இந்த வாய்ப்பைத் தந்த உங்களுக்கு நன்றி சொல்லி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 12—30

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டு துறைகளுக்கும் கிட்டத்தட்ட ரூ.13,266,65,16,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்காண்டு உள்ளாட்சித் துறைக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படுவது ஒரு நல்ல அறிகுறியாக நான் பார்க்கிறேன். அதிலே உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இதிலே தனித்த கவனம் செலுத்தி அந்தத் துறையினுடைய பணிகளை விரைவுபடுத்துவதற்காக, வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்ற அதே சிந்தனையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார் என்பதற்கான வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக துணை முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அவர் வருங்காலங்களிலே ஓர் அரசியல் கட்சி என்ற முறையில், ஓர் அரசியல் நாகரிகம் கருதி என்னுடைய கருத்து, எதிர்காலத்தில் ஓர் இளம் தலைவர் நாட்டுக்குத் தேவை என்ற வகையில் உருவாகியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அவரை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். சுயநலம் என்ற முறையில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடமும், மரியாதைக்குரிய பேராசிரியர் போன்றோர்களிடமும் கருத்துகளை விவாதிப்பது அல்லது மோதுவது என்பதில் கொஞ்சம் தயக்கமும், தேக்கமும் இருக்கின்றது. இளம் தலைவர் வந்துவிட்டால் அதிலே அந்தக் கருத்துகளை எங்களைப் போன்றவர்கள் வேகமாக எடுத்துப் பேசுவதற்கும், கருத்துகளைச் சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். அவர் வளர வேண்டும் என்று வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த உள்ளாட்சித் துறையில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நேரம் கருதி, முன் வரிசையில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்படும். அதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே குறிப்பாக உள்ளாட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகச் சிறப்பாகப் பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன.
165அ அதிலே முக்கியமான ஒன்று, அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய 73–வது திருத்தம் குறித்து தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய நிலைப்பாட்டைப் பற்றி பக்கம் 9–16 வரை கிட்டத்தட்ட 8 பக்கங்களிலும் அது விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதிலே நான் புரிந்துகொண்ட சாராம்சம் என்பது மாநில சுய ஆட்சியினுடைய அந்தக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்கும், மத்திய அரசாங்கத்தினுடைய தலையீடு எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றி விளக்கமாகச் சொல்லியிருப்பதாகவும் நான் கருதுகிறேன். அதோடு, இந்த உள்ளாட்சி நிர்வாகத்தில், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி என்ற முறையிலும், மாவட்ட ஊராட்சி என்ற முறையிலும், தமிழ்நாடு அரசின் கருத்து என்பது இரண்டு அடுக்கு முறை என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் வருகிறது. நான் கேட்பதும், இதிலே விளக்கம் கொடுக்க விரும்புவதும், மத்திய அரசாங்கத்தினுடைய பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா சட்டத்தின் அடிப்படையிலே, தேசம் முழுமையிலும் அது அமல்படுத்தப்படுகிறது. ஆனால், நடைமுறைரீதியாக, அனுபவரீதியாக இரண்டு அடுக்கு முறைதான் வெற்றிகரமாக இருக்கும் என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது. ஆனால் இதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், எந்த நிலையில் சொல்லிக்கொண்டிருக்கிறோமோ, மாறுதல் காண்பதற்கான முயற்சியைப் பற்றி தனித்த அளவிலே நமது அரசாங்கத்தினுடைய முயற்சி என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். இங்கேகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்களுக்கு அந்தக் கருத்து இருக்கின்றது. இரண்டு அடுக்கு முறைதான் வெற்றிகரமாக இருக்கும் என்று கருதுகிறார்கள். அதைப் பற்றி ஒரு தனித்த தீர்மானமோ, அதைப் பற்றிய ஒரு சட்டமுன்வடிவையோ நாம் உருவாக்குவதற்கு எந்த முறையில் வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் கருதவில்லை, ஆனால் அதைச் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைகளிலே குறிப்பாகப் பல்வேறு பிரச்சினைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் சில செய்திகளைப் பார்க்கின்றபோது, ஊராட்சிக்குரிய அதிகாரங்கள் என்று பார்க்கின்றபோது, அதிலே சில மாறுபாடான செய்திகளாக நான் கருதுவது, 59 ஆம் பக்கத்திலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊராட்சித் தலைவர்களைப் பொறுப்பாக்க வேண்டும் என்று இதில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றீர்கள். அப்படியானால் இந்தத் திட்டங்களும், காரியங்களும் நிறைவேறுவதற்கு ஊராட்சித் தலைவரே பொறுப்பு என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இதைச் சட்டமாக்குகின்ற முறையில் பார்த்தால், அவர்களை ஓர் அரசுப் பணியாளர்களைப்போல நாம் கருதுகிறோமா என்ற கேள்வி அதில் எழுகிறது. இதைப் பற்றி எனக்கு விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால் அதில் திருத்தம் வேண்டும். ஏனென்றால் அவர்களை அரசுப் பணியாளர்கள், ஊழியர்களை எப்படி வேலை வாங்குகிறோம் என்ற முறையிலேயே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும், அதற்கு உள்ளாக்குவதற்கான முயற்சி தோன்றுவதுபோல் நான் கருதுகிறேன். அதைப் பற்றி விளக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே நமது சிறப்புக்குரிய திட்டம் என்பது, கலைஞர் வீட்டு வசதித் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. அதேபோல், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டமும் சிறப்பாக நிறைவேற்றப்படுகிறது. அதற்குரிய முயற்சிகள் எடுக்கின்றபோது அந்தத் தொகையைக் கூடுதலாக்க வேண்டும் என்று திருச்சியில் நடைபெற்ற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்குகொண்ட அந்த நிகழ்ச்சியில் நாங்கள் வேண்டுகோள் வைத்திருக்கின்றோம். அந்த வீட்டிற்கான தொகையை அதிகரிப்பது என்பதுதான் சரியாக இருக்கமுடியும். அதனை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், இதனை அறிவிப்பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். இந்தச் சிக்கல்களைப் போக்குவதற்கான வழி தெரிகின்ற காரணத்தினாலே அந்தத் தொகையை உயர்த்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக

அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற அந்தக் கணக்கெடுப்புப் பட்டியலைப் பற்றி நான் பார்த்தேன். அதிலே குடும்ப உறுப்பினர்களில் யாருக்காவது வேலை இருந்தால் அவர்களுக்கு இல்லை என்று இருக்கிறது. ஒரு குடும்பத்திலே இருப்பவர்களுக்கு வீடு இல்லாமல், ஒரு குடும்பத்திலேயே குடியிருந்தால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வேண்டுமே, அதைப் பற்றி இந்த அரசு என்ன கருதுகிறது என்பது என்னுடைய கேள்வி. இதைப் பற்றி, அந்தக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரத்திலே அப்படி எடுக்கப்பட்டுவிட்டால் பல இலட்சக்கணக்கான பேர்கள் அதிலே விடுபட்டுப் போய்விடுவார்கள். இதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

நான் ஏற்கெனவே வருவாய்த் துறையிலே சொன்னதுபோல, குளம், ஆறு, களம், மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை வகைப்பாடு செய்து மாற்றினால்தான் எல்லோருக்கும் அந்த இடம் கிடைக்கும். அதைச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும்.

கிராமங்களிலே கழிவறை வசதி என்பதற்காக 2,200 ரூபாய் என்று அது நிர்ணயிக்கப்பட்டு அதுதான் தொடருகிறது. ஆனால் மாண்புமிகு துணை முதலமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே இருக்கிற அந்தக் குழுவிலே 7,500 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டோமே, அது ஏதாவது அனுமதிக்கப்பட்டிருக்கிறதா? அதைத் தொடர்ந்து வலியுறுத்திப் பெறுவதற்கு உரிய முயற்சியை நமது அரசு மேற்கொள்ளுமா? மேற்காள்ள வேண்டும் என்பதுதான் இதிலே இருக்கிறது. ஏனென்றால் அமைச்சருக்கே அந்த விருப்பமும், அந்தக் கருத்தும் இருக்கிறபோது இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குறிப்பாக ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான அந்தச் செய்திகள் அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் சென்ற ஆண்டும் சொன்னோம், அதற்கு முந்தைய ஆண்டும் சொல்லப்பட்டது. ஆனால் இதுவரை அவை பிரிக்கப்படவில்லை. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும் என்ற அந்தக் கருத்து வலுவாக இருக்கிறது. ஆகவே நிருவாக வசதிக்காக அதைச் செய்வதற்குரிய முயற்சிகளை

எடுத்து, அதை எல்லா ஒன்றிய அளவிலேயும் அந்தப் பிரித்தல் பணிகளைச் செய்வதற்குரிய தனித்த முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தொகுப்பு வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக தனி நிதி வேண்டும். தனி நிதி என்று சொல்கிறபோது, நமது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமாகப் பல இடங்களிலே செய்கிறோம். அது போதுமானதாக இல்லை. இதிலே எல்லோருடைய வேண்டுகோளாக இருப்பதனுடைய கருத்து என்னவென்றால், இன்னொரு 30 இலட்சம் ரூபாயை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உயர்த்தி, 2 கோடி ரூபாயாக தொகுதி மேம்பாட்டு நிதியை நீங்கள் அறிவித்துவிட்டால் இந்த மாதிரிப் பணிகள் எல்லாம் சிறப்பாக மேற்கொள்ளப்படும். அதற்கான முயற்சிகளை இந்த அறிவிப்பிலேயே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பணியாளர்கள் என்ற முறையிலும் பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதிலே மக்கள் நலப் பணியாளர்களையும் முழு நேர ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அதைச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

அதேபோல், 20 ஆண்டுகளாக பேரூராட்சிகளிலே தினக்கூலிகளாகப் பணியாற்றியவர்களை இப்போது நிரந்தரம் செய்திருக்கிறோம். பழைய ஓய்வூதியத்தின் அடிப்படையிலே அவர்களை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் பணியாற்றியவர்களை ஊராட்சிகளாக மாற்றிய காரணத்தினாலே பணியாளர்களைப் பேரூராட்சிகளுக்கு மாற்றிவிட்டோம். அதிலே இருக்கிற தினக்கூலிப் பணியாளர்களை மாற்றவில்லை என்ற கோரிக்கை இருக்கிறது. அதைப் பரிசீலிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, ஊராட்சி ஒன்றியங்களில் பணிச் சுமை அதிகமாக இருக்கிறது. நிறைய திட்டங்கள், கோடிக்கணக்கான ரூபாய் நிதி கொடுக்கிறோம். அதனால், பணிச் சுமை ஏராளமாக இருக்கிறது. இரவு, பகலாகப் பணியாற்றுகிறோம் என்ற கருத்து இருக்கிறது.

மனச் சுமையும் அவர்களுக்கு ஏற்படுகிறது. அதைப் பற்றி சிந்தித்து அந்தப் பணிச் சுமையைக் குறைப்பதற்கு ஊழியர்களை அதிகமாக நியமனம் செய்வதற்கான தனித்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, ஆய்வுக் கூட்டம் என்ற பெயராலே மாவட்ட ஆட்சியாளர்கள் நடத்துவது வாரத்திற்கு 3 முறை நடக்கிறது, 4 முறை நடக்கிறது. இப்படி நடந்தால் எப்படி திட்டப் பணிகள் அந்தக் கிராமங்களிலே நடைபெறுவதை அந்த அதிகாரிகள் நேரில் போய் பார்க்க முடியும்? அதனால் ஆய்வுக் கூட்டத்தைத் தடுத்து, ஆய்வு செய்வதற்கு அவர்கள் களத்திற்குச் செல்ல வேண்டும். அதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும். அதற்காக தனித்த முயற்சியை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே மிக முக்கியமாக என்னுடைய மன்னார்குடி தொகுதி என்ற முறையில் நமது மன்னார்குடி நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டும் என்று நீண்ட நாள் கோரிக்கை வைத்து, சென்ற ஆண்டில் நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே அறிவித்து பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அந்த அறிவிப்புக்கு ஏற்ப இந்த ஆண்டே நிதியொதுக்கீடு செய்து மன்னார்குடி நகராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கூத்தாநல்லூர் நகராட்சிக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மன்னார்குடி நகரத்திற்குள்ளாகவே செல்கிறது. ஆனால் மன்னார்குடி நகரத்திற்கு அது பயன்படவில்லை. அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே அதை இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு பிளவக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும். மதுரை காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சிவகங்கை ஒன்றியம், காளையார்கோவில் ஒன்றியப் பகுதிகளையும் சேர்க்க

வேண்டுமென்று அந்தச் சட்டமன்ற உறுப்பினர் கோருகிறார். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு முக்கியமான செய்தி. மாற்றுத் திறனாளிகளுக்கு மத்திய, மாநில அரசுப் பணியாளர்களுக்குத் தொழில் வரி செலுத்துவதில் இருந்து முழு விலக்கு வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைக் குறிப்பாக சென்னை மாநகராட்சி, அதேபோல பல மாநகராட்சிகளிலே அவர்களுக்குச் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், பழைய சட்டத்தைப் பயன்படுத்தி, 1919 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம், 100 சதவிகிதம் ஊனமிருந்தால்தான் அவர்களுக்குத் தொழில் வரி விலக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. 100 சதவிகிதம் ஊனமிருந்தால் எந்தத் தொழிலும் செய்ய முடியாது. அது நேரடியாக, யதார்த்தத்திற்குப் புறம்பாக இருக்கிறது. ஆகவே இதிலே மாற்றி சிந்திக்க வேண்டும். 1995 ஆம் ஆண்டினுடைய சட்டத்தின்படி குறைந்தபட்சம் 40 சதவிகிதம் ஊனமிருந்தாலே அவர்கள் மத்திய, மாநில அரசு கொடுக்கும் சலுகைகளைப் பெறலாம் என்று இருக்கிறபோது, அவர்களுக்கு அந்த வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. நம்முடைய சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்களும் இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார். இது மிக அவசியமானது. ஏனென்றால் மாற்றுத் திறனாளிகளுக்காக நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் தனித் துறையை ஏற்படுத்திச் செயல்படுகிற காலத்திலே அந்த வரி விலக்கை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இந்த உள்ளாட்சித் துறை . . .

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வை. சிவபுண்ணியம் உரையாற்றியது போதும். காலையில் என் முன்னாலே வைத்துத்தான் எழுதினீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: இந்தக் கோரிக்கையை அண்ணன் ஞானசேகரன் கொடுக்கிறபொழுது – இதிலே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் உடன்பாடானதுதான். ஆகவே, அவர்களுக்காகவும் சேர்த்து இந்தக் கோரிக்கையை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக

உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சிகளிலே பணியிடங்களைப் பற்றிய தொடர்ந்த கேள்விகள் இருக்கின்றன. அதற்காக என்ன செய்யப் போகிறோம் என்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். ஏனென்றால், தொடர்ந்து பணியிடங்கள் தேவையாக இருக்கின்றன. இன்னொரு புறத்திலே, கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் இருக்கிற பணியாளர்களெல்லாம் பணியில்லாமல் இருக்கிறார்கள். 20 ஆண்டு காலமாக கடன் வழங்கவில்லை, 10 ஆண்டு காலமாக வசூல் இல்லை. ஆனால், இப்பொழுது நாம் வீடு கட்டுகிற திட்டத்தை, கலைஞர் வீட்டு வசதித் திட்டம் என்று அறிவிக்கிறோம். இந்தப் பணிகளில் அவர்கள் அனுபவமாக இருக்கிறார்கள். ஒருகால் அப்படியொரு வாய்ப்பு இருந்தால்கூட, அவர்களையெல்லாம் பணிமாற்றம் செய்து நமது உள்ளாட்சித் துறையிலே இணைத்துக்கொள்ள முடியுமா என்ற கேள்வி, அந்த வேண்டுகோள்கூட இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் நாம் சிந்திக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு என்பது ஆண்டுக்காண்டு கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துகிறீர்கள். அது போதுமானதாக இல்லை. கொஞ்சம் கணிசமாக ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். திட்டங்கள் ஏராளமாக நடக்கின்றன. கோடிக்கணக்கிலே செல்கிறது. ஆனால் ஊராட்சிகளுக்குரிய தனித்த செயல்பாடு என்பதற்கான நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிதி ஒதுக்கீடு இல்லை என்று வருகிறது. மாவட்ட ஊராட்சிக்கும் இல்லையென்று வருகிறது. ஆகவே, இதற்காக என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். ஆகவே, மாவட்ட வளர்ச்சி முகமை பற்றிய கருத்துகூட இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தினாலே, குழப்பத்தோடு நிருவாகங்கள் இல்லாமல், நீங்கள் தெளிவாக முடிவெடுத்து, இரண்டு அடுக்கா, மூன்று அடுக்கா என்பது பற்றிய ஒரு தனித்த முயற்சியை நம்முடைய மாநில அரசு எடுத்தால், அதை மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்துவதன் மூலமாக ஒரு தெளிவான, சீரான நிருவாகத்தைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு டாக்டர் தி. சதன் திருமலைக்குமார். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 8 நிமிடங்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மண்ணின் மைந்தனுக்கா எட்டு நிமிட நேரம்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் பொதுச் செயலாளர், எங்கள் ஆருயிர் அண்ணன் வைகோ அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.*

ஒரு மாநிலம் அல்லது ஒரு நகரம், கலாச்சாரம், பண்பாடு மற்றும் நாகரிகம் போன்றவற்றில் எவ்வாறு சிறந்து விளங்கியது என்பதை எதிர்காலச் சந்ததியினர் அறிந்துகொள்வதற்கு அதன் உள்ளாட்சி முறை மற்றும் ஊரமைப்பு, நகரமைப்பு முறை போன்றவை முக்கிய ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. பண்டைய தமிழகத்தில் சோழர்கள் எவ்வாறு மக்களாட்சி முறையைக் கடைப்பிடித்தார்கள் என்பதை நாம் கல்வெட்டுகள்மூலம் அறிகின்றோம். சிந்து வெளி நாகரிகம், எகிப்து நாகரிகம், சுமேரியர் நாகரிகம், பாபிலோனியர் நாகரிகம் போன்ற நாகரிகங்களை நாம் வரலாறுமூலம் படிக்கும்பொழுது, அவற்றிலிருந்த ஆட்சி முறை, நகரமைப்பு முறை, கட்டடங்கள் போன்ற சான்றுகளை வைத்து அறிய முடிகிறது. குறிப்பாக, சிந்துவெளி நாகரிகத்தை ஆராயும்போது, மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற நகரமைப்புகளைப் படித்து அறிய முடிகிறது. குறிப்பாக, மொகஞ்சதாரோ நகரமைப்பைப் பற்றிப் படிக்கும்பொழுது சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் பொதுச் சுகாதாரத்திற்கும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்கும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாகரிகத்தில் வாழ்ந்தார்கள் என அறிய முடிகிறது. வடகிழக்குப் பருவக் காற்றும், தென்கிழக்குப் பருவக் காற்றும் வீசுகின்ற காலத்தில், அந்தத் தென்றலும், வாடையும் சீராகக் கிடைத்திட 33 அடி அகலத்திற்கு தென்வடக்காகவும், கீழ்மேற்காகவும் தெருக்கள் அமைத்திருக்கின்றார்கள். சிறிய தெருக்கள் 16 அடி அகலத்திற்கு

அமைத்திருக்கின்றார்கள். தெருக்களின் இருமருங்கிலும் நடைபாதைகள் மற்றும் கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத்திருக்கிறார்கள். கழிவு நீர்க் கால்வாய்களின் இரு பக்கங்களிலும் சீராக, வரிசையாக செங்கற்களை அடுக்கி வைத்திருக்கின்றார்கள். அச்செங்கற்களை சாந்து வைத்து பூசவில்லை. வடிகாலின் ஒரு பகுதியில் சீர்கேடு ஏற்படும்போது, அவ்வாறு சீர்கேடு ஏற்பட்ட இடத்தில் கழிவு நீர்க் கால்வாயைப் பிரித்து செங்கற்களை வீணாக்காமல் எளிதாக எடுக்க உதவுவதற்கு அவ்வாறு வைக்கப்பட்டிருப்பதாகக் கருதுகிறோம். கழிவு நீர் வாய்க்காலில் குறிப்பிட்ட இடங்களில் பாதுகாப்பு, ஒரு வழி திறப்புக் குழிகள் (Protective Wall Pits) கட்டப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் தெருக்கள் முடிவடையும் இடங்களிலும், சேருகின்ற இடங்களிலும், வளைந்து செல்லும் இடங்களிலும் கட்டி அவர்கள் அந்தக் கழிவு நீரை கடைசியில் ஒரு கழிவு நீர்க் குளத்தில் கொண்டு சேர்த்திருக்கின்றார்கள் என்பதைக் கேட்கும்பொழுது 5,000 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் எப்பேர்ப்பட்ட நாகரிகத்தில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. ஆனால் அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 5,000 ஆண்டுகளுக்கு பின்னால் வாழ்கின்ற நாம் இன்னும் அந்தச் சுகாதாரத்தைப் பேணிக் காப்பதில் முன்னேறவில்லை என்றே கருதுகிறேன். அவர்கள் மிக அழகான வீடுகளை அமைத்து, அதில் படுக்கை அறை, குளியல் அறை, கழிப்பறை போன்ற அறைகளை எல்லாம் அமைத்து, அவர்கள் கிராமங்களில் விருந்தினர் மாளிகைகூட அமைத்திருப்பதாகக் குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, நாம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மும்முரம் காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைபெறுகின்ற நகராட்சிப் பகுதிகளில் விரைவில் வீடுகளுக்கு இணைப்புக் கொடுத்து, தோண்டப்பட்டிருக்கின்ற சாலைகளைச் சீர்செய்து, போக்குவரத்திற்கு உதவி புரிந்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இதுவரை இத்திட்டத்தில் சேராத நகராட்சிகளையும் விரைவில் இணைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–45

நகரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள தெப்பக்குளங்கள், ஊருணிகள், குட்டைகள், குளங்கள் போன்றவற்றைச் செப்பனிட்டு, மழைநீர் சேகரிப்புத் திட்டம் பற்றிய விழிப்புணர்வை

மக்கள் மத்தியில் ஏற்படுத்தி நிலத்தடி நீரைப் பெருக்கி, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நவீனமயமாக்கியும் மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் 24 மணி நேரமும் கிடைத்திட தீவிர நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து அனைத்திற்கும் ஒரு பொதுவான இடத்தைத் தேர்வு செய்து அந்த இடத்திற்கு திடக் கழிவுகளைக் கொண்டு வந்து கண்ணாடிகள், பிளாஸ்டிக் போன்ற பொருட்களைத் தனியாகப் பிரித்து மற்றவற்றை நவீன முறையில் எரியூட்டி அழிக்க ஆவன செய்ய வேண்டும். இதன்மூலம் எரிவாயு, மின்சாரம், இயற்கை உரம் போன்றவை தயாரிக்க முயற்சி செய்ய வேண்டும். மீதேன் போன்ற விஷ வாயுக்களையும் தடுத்திட வேண்டும்.

உணவு ஆய்வாளர் பணியிடங்களில் B.Sc., (Chemistry) தகுதியோடு சுகாதார ஆய்வாளர் படிப்பு படித்தவர்களை நியமித்து, ஆரோக்கியமற்ற உணவுப் பண்டங்கள் விற்பதைக் கண்காணிக்கச் செய்து மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நகராட்சிகளில் உள்ள பழுதடைந்த வாகனங்களை உடனடியாகப் பழுது நீக்கவோ, விற்பதற்கோ அல்லது ஏலம் விடவோ எளிமையான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நகராட்சிப் பகுதிகளில் போதிய அனுமதி பெற்று வீடு கட்டி நீண்ட காலமாகக் குடியிருந்து வருபவர்கள் சொத்து வரி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள். குடிநீர் இணைப்புக்கு டெபாசிட் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் வீட்டுக்கு, அந்த இடத்திற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதனால் அடிப்படை வசதிகள் கிடைக்காமல் பலர் வருந்துகின்ற நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, ஏற்கெனவே அறிவித்த, சதுர அடிக்கு 2 ரூபாய் கட்டி அங்கீகாரம் பெற வேண்டிய காலக்கெடுவை மீண்டும் நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நகராட்சிகளிலிருந்து மாநகராட்சிகளுக்கு ஒரு சிறிய பிரிவு பணியாளர்களுக்கு deputation–ல் மாறுதல் கொடுப்பதுபோல்,

அனைத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'தி.மு.க. சட்டப் பேரவைத் தேர்தல் 2006' அறிக்கையில், 'உள்ளாட்சி அமைப்பைச் சீரமைத்தல்' என்ற தலைப்பில் 'தற்போது நடைமுறையில் உள்ள உள்ளாட்சி அமைப்பின் மூன்றடுக்கு முறையின் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகளையும், சிக்கலையும் களைவதற்கு ஏற்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர, மத்திய அரசை வலியுறுத்துவோம்,' என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆகவே, மக்களாட்சியின் மகத்துவத்தைப் பாதுகாக்க ஈரடுக்கு முறையைக் கொண்டுவர தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் வீட்டு வசதித் திட்டம், கிராமப்புறங்களில் சிறப்பாக நடைபெற இதற்கென்று தனியாக அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கூடுதல் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் போன்றவர்கள், இவற்றைக் கவனிப்பதில் அவர்களுக்குப் பணிச் சுமை அதிகமாக இருக்கிறது. இதனால் அவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, தனி அலுவலர்கள் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 149 நகராட்சிகளில் சுமார் 76 நகராட்சிகளில் சில ஆண்டுகளாக நகராட்சி ஆணையர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அப்பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 49 பேரூராட்சிகள், நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு 2 ஆண்டுகள் ஆன நிலையிலும் 3 ஆம் நிலை நகராட்சிகள் எனும் பெயரில் பேரூராட்சிகள் நிலையிலேயே இருந்துகொண்டு E.O. என்ற அதிகாரியின்கீழ் அங்கே நிருவாகம் நடைபெறுகிறது. ஆகவே, அங்கே கமிஷனரை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–50

தற்போதுள்ள 7 மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள், 35 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் 92

நகராட்சிகளும், 15 மாவட்டங்களும் இருந்தகாலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை. தற்போது நகராட்சிகளின் எண்ணிக்கை 149 ஆகவும், மாவட்டங்களின் எண்ணிக்கை 33 ஆகவும் உயர்ந்துள்ளன. தற்போதைய நிலையில், உதாரணத்திற்கு தஞ்சை மண்டல இயக்குநர் மட்டும் 7 மாவட்டங்களிலும், 27 நகராட்சிகளிலும் பணியாற்ற வேண்டியுள்ளது. இதனால், பணித் திறனும் நகராட்சிகளின் மேலாண்மையும் பாதிக்கிறது. எனவே, மண்டலங்களின் எண்ணிக்கையை 11 ஆக உயர்த்த வேண்டுகிறேன்.

வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், வாசுதேவநல்லூர் மற்றும் ராயகிரி பேரூராட்சிகளுக்குக் குடிநீர் கிடைத்திட தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். கடந்த வருடம் நடந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது பதிலளிக்கும்போது 2010 மார்ச் 31–க்குள் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்றார்கள். ஆனால், இன்னும் அப்பணி முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் பணியைத் துரிதப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கிருக்கின்ற அதிகாரிகளைக் கேட்கும்போது இன்னும் ஓராண்டாகும் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையை முடிக்கப் போகிறேன். எங்கள் தொகுதியிலுள்ள ராமசாமியாபுரம் ஊராட்சிக்குட்பட்ட முத்துச்சாமியாபுரம், வெள்ளக்கவுண்டன்பட்டி ஆகிய கிராமங்களுக்கும், மடத்துப்பட்டி மற்றும் புன்னைவனம் ஆகிய ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்க மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுகிறேன்.

புளியங்குடி மக்களின் தாகத்தைத் தீர்க்க வாழமலையாறு நீர்த்தேக்கத் திட்டத்தை ஏற்படுத்தி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிக்கொள்கிறேன்.

புளியங்குடி நகரத்தில் 40 ஆண்டுகளுக்கு முன்பு குடிநீர் விநியோகத்திற்குப் பதிக்கப்பட்ட பழுதடைந்த இரும்புக் குழாய்களை அகற்றிவிட்டு புதிதாகக் குழாய்களை மாற்றி

மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.*

திரு. து. ரவிக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு வாய்ந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இந்த மாமன்றத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் ஒரு கோரிக்கையை வலியுறுத்தி வந்தேன். பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு சில வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிலே அந்தத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்குச் செலவிடும்போது S.C., S.T. *பிரிவினருக்கு இருபத்து இரண்டரை சதவீதம் அந்த நிதியிலே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. அதைப்போலவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை விடுத்து வந்தேன். மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடத்திலேயும் நேரடியாக மனு ஒன்றையும் அளித்திருந்தேன். அதுபோல, நம்முடைய அதிகாரி பெருமக்கள் அவர்களிடத்திலேயும் எடுத்துச் சொல்லியிருந்தேன். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 151–லே அதற்கான ஓர் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 19 சதவீதம் ஆதி திராவிட பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டுமென்கின்ற அறிவிப்பு இதிலே செய்யப்பட்டிருக்கின்றது. என்னுடைய கோரிக்கையை ஏற்று தமிழகத்திலே ஆதி திராவிட மக்களுக்கு இந்த அரசு செய்து வருகின்ற அளப்பரிய பணிகளின் அடுத்தகட்டமாக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத ஓர் அறிவிப்பாக இத்தகைய அறிவிப்பை வெளியிட்ட*

மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்ட ஊராட்சிகளை நீக்கிவிட்டு இரண்டடுக்கு முறை ஊராட்சிகளை ஏற்படுத்திக்கொள்ளும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவதற்கேற்ப அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கின்றது. மேலவை வேண்டுமென்று எப்படி இந்த மாமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கின்றோமோ, அதைப்போலவே இந்த முக்கியமான கோரிக்கையையும் வலியுறுத்தி ஒருமனதாக இந்த மாமன்றத்திலே தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–55

இன்றைக்கு பல்வேறு தொண்டு நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள், ஆதி திராவிட ஊராட்சித் தலைவர்கள் படுகின்ற பிரச்சினைகளையெல்லாம், அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையெல்லாம் அறிக்கைகளாக வெளியிட்டு வருகின்றார்கள். குறிப்பாக பல்வேறு ஆதி திராவிட ஊராட்சித் தலைவர்களுக்கு, துணைத் தலைவர்கள் போதுமான அளவிலே ஒத்துழைப்பு நல்குவது இல்லை. அவர்களை ஏதாவது ஒரு பிரச்சினையிலே சிக்க வைத்து, அவர்களுடைய காசோலை வழங்கும் அதிகாரத்தை முடக்கி வைப்பதற்குக் காரணமாக இருக்கின்றார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற அல்லது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற, அதிகாரம் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்ற ஊராட்சித் தலைவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் அதிலே கணிசமாக ஆதி திராவிட ஊராட்சித் தலைவர்களுடைய எண்ணிக்கை இருக்கின்றது.

இதிலே, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்த சாதியப் பாகுபாடு என்பது செயல்படுகின்றது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆதி திராவிட ஊராட்சித் தலைவர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கான ஒரு நிலையை நம்முடைய அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய 12,618 கிராம ஊராட்சிகளிலே

இன்றைக்கு Tank Operator–களாக, துப்புரவுப் பணியாளர்களாக சுமார் 75 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். இவர்களையெல்லாம் நியமிக்கின்ற அதிகாரம் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் விரும்பினால் அவர்களை நியமிக்கலாம், வேண்டாமென்றால் நீக்கிவிடலாம் என்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. பல்வேறு நிலையில் பணியாற்றுகிறவர்களுடைய ஊதிய விகிதத்தையெல்லாம் மாற்றியமைத்து அவர்களுடைய வாழ்க்கையில் எல்லாம் ஒளியேற்றி வைத்த நம்முடைய அரசு, இந்தப் பணியாளர்களை மட்டும் இதுவரை கவனத்திலே எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் இப்போது மாதம் 600 ரூபாய் வாங்குகிறார்கள். அந்த ஊதியம்கூட கடந்த ஆட்சிக் காலத்திலே 2005 ஆம் ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்டதுதான். அந்தப் பணியாளர்களை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றுகிறவர்கள், துப்புரவுப் பணியிலே ஈடுபடுகிறவர்கள் அவர்களையெல்லாம் குறைந்தபட்சம் பகுதிநேர ஊழியர்களாகவாவது அறிவித்து, அவர்களுக்கு ஒரு காலமுறை ஊதியத்தை அறிவிக்க வேண்டும். அவர்களை நியமனம் செய்கின்ற அதிகாரத்தை அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற வட்டார வளர்ச்சி அலுவலர்களிடத்திலே கொடுக்க வேண்டும். ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்திலே அந்த அதிகாரம் இருந்தால் அது முறைகேடாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இதிலே நம்முடைய அரசு கவனம் எடுத்துக்கொண்டு அந்த 75 ஆயிரம் ஏழை ஊழியர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்ற வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மக்கள் நலப் பணியாளர்கள் கடந்த ஆட்சியிலே என்னென்ன இடர்பாடுகளையெல்லாம் சந்தித்தார்கள். அதனால் எவ்வளவு பேர் தற்கொலை செய்து கொண்டார்கள் என்கின்ற விவரமெல்லாம் நமக்குத் தெரியும். அவர்களுக்கு, இன்றைக்கு ஒரு சிறப்பு காலமுறை ஊதியத்தை நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது என்றாலும் அவர்களெல்லாம் பகுதிநேர ஊழியர்கள் என்றுதான் அறிவிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பணியை எடுத்துப் பார்த்தால், அதிலும் குறிப்பாக இன்றைக்கு தேசிய வேலை உறுதித் திட்டத்தைச் சிறப்பாக நம்முடைய அரசு செயல்படுத்துகிறது என்று சொன்னால், அதிலே மக்கள் நலப் பணியாளர்களுடைய பங்குதான் மிக அதிகம். அப்படி நம்முடைய அரசினுடைய நல்ல திட்டத்தை செயல்படுத்துவதற்கு முழு நேரமாகப் பணியாற்றிக்

கொண்டிருக்கின்ற அந்த ஊழியர்கள் இன்றைக்குப் பகுதிநேர ஊழியர்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே பல்வேறு திட்டங்களை அவர்கள் பெற முடியாத நிலையிலே இருக்கின்றார்கள். மற்ற ஊழியர்களுக்கு இருக்கின்ற மருத்துவப் படி அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மற்ற அரசு ஊழியர்களுக்கு இருப்பதுபோன்ற விடுப்புகளோ அல்லது விடுமுறைகளோ அவர்களுக்குக் கிடையாது. இந்த நிலையை மாற்றி அவர்களை முழுநேரப் பணியாளர்கள் என்று நம்முடைய அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய உள்ளாட்சித் துறையின் கீழே இருக்கின்ற பல்வேறு நிர்வாகத்திலே S.C., S.T., பிரிவினர்களுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்கள் இன்னும் முழுமையாகக் கண்டறியப்படவில்லை. நம்முடைய அரசு பொறுப்பேற்றவுடனேயே 2006 ஆம் ஆண்டிலேயே இந்த பின்னடைவு காலிப் பணியிடங்களைக் கண்டறிவதற்கான ஒரு உயர்நிலைக் குழுவை அமைத்து அரசாணை வெளியிட்டது. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் இன்னும்கூட பல்வேறு துறைகளிலே அந்தப் பின்னடைவு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாத நிலை இருக்கிறது. இதைப் பற்றி அண்மையிலே இங்கே வந்திருந்த தேசிய தாழ்த்தப்பட்டோர் கமிஷன் தலைவரிடத்திலேகூட புகார்களையெல்லாம் சில இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைக்குப் பல துறைகளிலே அந்த இடங்கள் கண்டறியப்பட்டு நிரப்பப்பட்டிருந்தாலும்கூட, குறிப்பாக பெரிய துறைகள், உள்ளாட்சித் துறை போன்ற துறைகளிலே நிறைய காலிப் பணியிடங்கள் இருக்கின்றன, அவற்றைக் கண்டறிந்து ஒரு சிறப்பு நேர்வாக, அந்தக் காலிப் பணியிடங்களை எல்லாம் நிரப்புவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், உள்ளாட்சித் துறைக்கு மட்டுமல்ல, அவர் மனமுவந்து பிற துறைகளிலே இருக்கின்ற அந்தக் காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்கு ஆணையிட வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கன்வாடி பணியாளர்கள் நியமனத்திலே இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும். S.C., S.T. பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்காமல், அந்தப் பணியிடங்களை நிரப்பக்கூடாது என்று இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாக சென்னை உயர் நீதிமன்றத்திலே தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கின்றது. நீதிமன்றம் தீர்ப்பு அளித்துத்தான் இட ஒதுக்கீட்டை நிரப்பவேண்டும் என்கின்ற நிலை நம்முடைய அரசுக்கு இல்லை. இங்கே இருக்கின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மக்கள் எல்லாம் நீதிமன்றங்களைவிட இந்த மாமன்றத்தைத்தான் பெரிதாக நினைக்கின்றார்கள். நீதிபதிகளைவிட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும்தான் உயர்ந்த நிலையிலே வைத்துப் பார்க்கின்றார்கள். அப்படி இருக்கின்ற நேரத்திலே நீதிமன்றங்கள் சொல்லித்தான் இட ஒதுக்கீட்டை வழங்கவேண்டும் என்கின்ற நிலை இருக்கக் கூடாது. உடனடியாக அந்த அங்கன்வாடி பணியிடங்களிலும், சத்துணவுப் பணியாளர்கள் நியமனத்திலும் முறையான இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும். நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி, அந்த இட ஒதுக்கீட்டினை உறுதி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, நம்முடைய உறுப்பினர்கள் பலரும் சொன்ன கலைஞர் வீட்டு வசதித் திட்டம். இதிலே அரசு ஊழியர்களிலே ஒப்பந்த நியமனத்தில் இருக்கின்றவர்கள், தினக் கூலி நியமனத்தில் இருக்கின்றவர்களுக்குக்கூட இந்தத் திட்டத்திலே eligibility இல்லை என்று சொல்லப்படுகிறது. பகுதி நேர ஊழியர்கள், முழுநேர ஊழியர்களை, நீங்கள் இதில் விலக்கி வைப்பதில்கூட ஒரு விதத்திலே நியாயம். ஒப்பந்த நியமனத்திலே இருக்கிறவர்கள், தினக் கூலி நியமனத்திலே இருக்கிறவர்களுக்குக்கூட வீடு கிடையாது என்று சொன்னால் அது நியாயமாக இருக்காது. எனவே, இதை மாற்ற வேண்டும். நான் பல முறை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இயன்ற இடங்களில் இந்த வீடுகளை சமத்துவபுரங்களாக அமைப்பதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, நகர்ப்புறங்களிலே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக, இன்றைக்கு எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படுகின்றன. இது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மட்டுமல்ல, சாதியப் பாகுபாடுகளைக் களைவதற்கு மிகவும்

உதவியான ஒரு திட்டம். இது நகர்ப்புறங்களிலே இருப்பதைவிட, கிராமப் பகுதிகளில்தான் மிக மிகத் தேவையாக இருக்கின்றது. ஏனென்று சொன்னால், அங்கே சுடுகாடுகளை முன்வைத்து பல்வேறு போராட்டங்கள், மோதல்கள், பிணக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்த எரிவாயு தகன மேடைகளை ஊரகப் பகுதிகளிலே அமைப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதி சார்ந்த ஒரு கோரிக்கை. இன்றைக்கு காட்டுமன்னார்கோவில் தொகுதியிலே பேரூராட்சிகள் மட்டும்தான் இருக்கின்றன. அதுவும் இரண்டு பேரூராட்சிகள்தான். அந்தப் பேரூராட்சிகளிலே காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி இன்றைக்கு பல விதங்களிலே விரிவடைந்திருக்கிறது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்முயற்சியினாலே, அங்கே பொறியியல் கல்லூரிகள் எல்லாம் உருவாக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பேரூராட்சி என்பது ஒரு நகராட்சியாக உயர்த்தப்படுகின்ற அளவுக்குத் தகுதி பெற்றதாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கருணை கூர்ந்து காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தான் பாரி. அவன் ஒரு தேரைத்தான் கொடுத்தான். ஆனால், கோடி கொடுத்த கொடைஞன், தான் குடியிருந்த வீடும் கொடுத்த கலைஞர் இந்த நூற்றாண்டின் ஈடு இணையற்ற கருணை முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆமைகளாய், ஊமைகளாய், அடிமைகளாய், தொழும்பர்களாய் ஆதிக்கக் கூட்டத்தால் ஆக்கப்பட்டவர்களும், சாமான்யர்களும் சட்டப் பேரவைக்கு வரமுடியும், சகாப்தம் படைத்திட முடியும் என்கிற வரலாற்றை உருவாக்கிக் காட்டினார் பேரறிஞர் அண்ணா. அவர் வழியில், ஊனமுற்றவர்களும் சட்டப் பேரவைக்கு வரமுடியும் என்கிற வரலாற்றைப் படைத்து, என்னை இந்தப் பேரவையில் அமர வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று

உரையாற்றும் வாய்ப்புத் தந்து, வாழும் அண்ணாவாக என்னை வாழ்த்திக் கொண்டிருக்கும் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொண்டர்களின் உறவுப் பாலமாக, தொடர்ந்து தலைவர் கலைஞரின் துணையாக இருக்கும் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் பணிவான வணக்கங்கள். உள்ளாட்சியின் மேன்மைக்காக உழைத்துக் கொண்டிருக்கும் உழைப்பின் சிகரம், "தொண்டு செய்வாய், தொண்டு செய்வாய் தமிழுக்கு, தமிழருக்குத் தொண்டு செய்வாய், துறைதோறும், துறைதோறும் துடித்தெழுந்தே, துடித்தெழுந்தே" என்ற வரிகளுக்கு மட்டுமல்ல, "மகன் தந்தைக்காற்றும் உதவி" என்கிற குறளுக்கு உரியவராய், குவலயம் போற்றும் பொறுமையின் விளக்கமாய், ஆயிரம் விளக்கின் அணையா விளக்காய், நிலைகுலைந்தவர்களையும், வாழ்வில் உருக்குலைந்தவர்களையும் வாழ வைக்கும் நல்லாட்சியின் நாயகர், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தந்தையில்லாமல் நான் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) என் தந்தையின் வழி தந்தை பெரியார் வழி, பேரறிஞர் அண்ணா வழி; என் வழியோ, என் தந்தையின் வழிதான் என்று, அடக்கத்தின் திருவுருவாய்த் திகழும் மாண்புமிகு துணை முதல்வர் எங்கள் தளபதி அவர்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மத்திய அமைச்சர், தென் மண்டல அமைப்புச் செயலாளர் அஞ்சா நெஞ்சர் அவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளின் மனம் கவர்ந்த சகோதரி, மாநிலங்களவை உறுப்பினர் அவர்களுக்கும், அறநிலையத் துறையை அறச்சாலையாக்கி, கடவுளையும், கடவுள் சொத்துக்களையும் சேதாரமில்லாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தென்புலத்தின் மூத்த அரசியல்வாதி மாண்புமிகு குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஒன்றியக் கழக நிருவாகிகளுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

இந்த உலகைப் படைத்தவன் ஆண்டவன் என்பார்கள். அவன் ஏன் ஊனமுற்றவர்களைப் படைத்தான்? அவனை இரக்கமற்றவன் என்று நான் சொல்லமாட்டேன். அவனுக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை எனக் கேட்கவும் மாட்டேன். படைப்புகளில், பிறப்புகளில் ஊனம் என்பது ஈனமல்ல எனச் சொல்வதற்கு, மாற்றுத் திறனாளிகள் என்று அழைப்பதற்கு, கருணைக் கடவுளாக கலைஞர் வருவார் என்பதற்காகத்தான் ஊனமுற்றவர்களையும் ஆண்டவன் படைத்திருப்பான் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓர் ஆட்சியின் நல்லாட்சிக்கு சாட்சியாக இருப்பது உள்ளாட்சிதான். கிராமங்கள்தான் நாட்டின் உயிர்நாடி. அந்தக் கிராம மக்களின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற துறைதான் உள்ளாட்சித் துறை. துணை முதல்வர் அந்தத் துறையின் சார்பில் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் ஆற்றப்பட்ட பணிகளைப்போல முன் எப்போதும் பணிகள் நடைபெறவில்லை என்பது மட்டுமல்ல, செயல்படுத்திய திட்டங்களின்மூலம் தமிழகத்தின் கிராமப் பகுதியின் நிலத்தோற்றமே முற்றிலுமாக மாறியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஊரகங்களில், ஊடகங்களைப் பார்க்க முடிகிறது. உலக நடப்புகளை உடனுக்குடன் அறிய முடிகிறது. கிராமங்களில் இந்தத் திருப்புமுனையை ஏற்படுத்தியது நம்முடைய துணை முதல்வர்தான். இந்த அவையிலே துணை முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளில், கொள்கைக் குறிப்புப் புத்தகங்களில் உள்ள சிலவற்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், படிக்க நூலகம், நடக்க பாதை, கடக்க பாலம், குடிக்க குடிநீர், பார்க்க தொலைக்காட்சி, விளையாட விளையாட்டு மைதானம், இவை அனைத்தும் அடங்கிய கிராமத்தை உருவாக்க தீட்டப்பட்ட திட்டம்தான் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 2,047 கோடி ரூபாய் அரசு நிதியுதவியோடு

10,104 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த நிதியாண்டின் இறுதியில் இந்தியாவிலேயே ஊராட்சிகள்தோறும் நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகள் பெற்ற முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழகம்தான் பெறும் வகையில் இந்நிதியாண்டில் 508 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 5 நகராட்சிகளுக்கும், 45 பேரூராட்சிகளுக்கும், குடிநீருக்காக ரூபாய் 1,183 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் நபார்டு நிதியுதவி, பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்டம் மற்றும் 12–வது நிதிக் குழு ஆகியவைமூலம் ரூபாய் 3,089 கோடி மதிப்பீட்டில் 22,758 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 31–3–2010 வரை ரூபாய் 3,352.58 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலம் தமிழ்நாடு என்றும், தமிழகத்தைப் பின்பற்றி மற்ற மாநிலங்களும் செயல்பட வேண்டுமென உச்ச நீதிமன்றமே பாராட்டுத் தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்திற்கு 1989 முதல் 2006 வரையிலான 17 ஆண்டுகளில் ரூபாய் 1,765 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு துணை முதல்வர் பொறுப்பேற்ற நான்கே ஆண்டுகளில் மட்டும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடனுதவி ரூபாய் 6,364 கோடியாகும்.

குடிசைகளே இல்லாத மாநிலமாக மாற்றும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட திட்டமான கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்காக, முதற்கட்டமாக, 3 இலட்சம் குடிசைகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு ரூபாய் 1,800 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் கடந்த 4 ஆண்டுகளில் 29 அமைக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 30 சமத்துவபுரங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கு ரூபாய் 75 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் சமுதாயக் கூடங்கள் அல்லது திருமண மண்டபங்கள் இல்லாத ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் அவற்றை ஏற்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 65,886 மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு 6,144 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின்மூலம் 50,838 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 27.77 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 34,634 மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி மூலம் நபர் ஒருவருக்கு தலா 10,000 வீதம் ரூபாய் 34.63 கோடி நிதியுவி வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் சார்பில் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டுக்கு வீடு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஐந்து கட்டங்களில் 1 கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, இதுவரை 1 கோடியே 8 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுவிட்டன. எஞ்சிய 44 இலட்சத்து 80,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு இந்நிதியாண்டில் ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனது கோரிக்கையை ஏற்று, இளையான்குடியில் உள்ள ஐந்து சாலைகளுக்கு ரூபாய் 2 கோடியே 61 இலட்சத்து 27,000 நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு துணை முதல்வருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கோரிக்கையை ஏற்று நீதிமன்ற கட்டடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளையான்குடிக்குப் புறவழிச் சாலை அமைத்துக் கொடுத்திட நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாநில அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிடும் வகையில் வருவாய் உச்சவரம்பு முற்றிலும் நீக்கப்பட்டதற்கும், கல்விக் கட்டணம் அறவே இரத்துச் செய்யப்பட்டதற்கும், மாற்றுத் திறனாளிகள் மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு

உணவுச் செலவாக மாதம் ரூபாய் 200 தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதை ரூபாய் 450 ஆக உயர்த்தியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முற்றிலும் பெண்களே உள்ள ஊட்டச்சத்து மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் கண்டிப்பாக திருமணம் ஆனவர்கள்தான் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து திருமணமாகாத மாற்றுத் திறனாளிப் பெண்களுக்கும் ஊனத்தின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்தால் நிறைய பெண்களின் வாழ்வில் வசந்தம் வீசும் வாய்ப்பு இருக்கிறது. தயவுசெய்து பரிசீலனை செய்திடத் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இளையான்குடி தொகுதியில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைத்துக் கொடுத்திட பணிவுடன் வேண்டுகிறேன். ஆர்.எஸ். மங்கலத்தின் கடைசிப் பகுதியில் மழைக்காலங்களில் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. தயவுசெய்து பூவாணி கிராமத்தில் ஒரு அணைக்கட்டு கட்டினால், மழை நீரைத் தேக்கி 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறச் செய்யலாம். தயவுசெய்து அணை ஒன்று கட்டித் தந்திட பணிவுடன் வேண்டுகிறேன். இளையான்குடி பேருந்து நிலையத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திடத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். இளையான்குடி தொகுதியில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் கொண்டு வந்ததற்காக தமிழக முதல்வருக்கு நன்றி கூறுகிறேன். அதே சமயத்தில், விடுபட்டுப்போன பகுதிகளை விரைவில் சேர்த்திட நடவடிக்கை எடுக்கும்படிப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இளையான்குடியில் சிதைந்து போய் இருக்கிற பொதுப் பணித் துறை பயணியர் விடுதியை அப்புறப்படுத்திவிட்டு, புதிய பயணியர் விடுதி அமைத்துக் கொடுத்திட ஆவன செய்திட வேண்டுகிறேன். பரமக்குடி தெ. புதுக்கோட்டை—மானாமதுரை சாலையில் மஞ்சள்பட்டினத்தில் சிறு பாலம் ஒன்று கட்டித் தந்திட ஆவன செய்திட வேண்டுகிறேன். இளையான்குடி தொகுதியில் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள வன்னிக்குடி வருவாய் கிராமங்களான முடிதானை, எட்டியக்குடி போன்ற கிராமங்கள் 40 கிலோ மீட்டர் தூரமுள்ள தேவகோட்டை சார் பதிவாளர் அலுவலகத்திற்கும், கலைக்குளம், கட்டியக்கார சிரமம் முடிதானை போன்ற கிராமங்கள் காளையார்கோவிலுக்கு அருகில் 15 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தும் 50 கிலோ மீட்டர் தூரமுள்ள

திருவாடனை பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சென்று பத்திரப் பதிவைச் செய்கின்றனர். தயவுசெய்து காளையார்கோவில் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பத்திரம் பதிந்திட ஆவன செய்திட வேண்டுகிறேன்.

இளையான்குடியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து விடுவதற்கும், இளையான்குடியில் இரண்டு நகரப் பேருந்துகள் விடுவதற்கும் அனுமதி தரும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். இளையான்குடி தொகுதியில் உள்ள ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்தில் நிறைய மண் சாலைகள் இருக்கின்றன. அவற்றைத் தார்ச் சாலைகளாக ஆக்கிட ஆவன செய்திட வேண்டுகிறேன். இளையான்குடி, ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியங்களில் உள்ள முன்னாள் ஜமீன் கண்மாய்கள் 50 ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அவற்றை செப்பனிட்டுத் தந்திடப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இளையான்குடியில் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும், நிதிப் பற்றாக்குறையினால் யாரும் ஒப்பந்தம் எடுக்க முன்வரவில்லை. தயவுசெய்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

இளையான்குடி தொகுதியில் கடைசிப் பகுதிக்கு ஒரு தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் அறுவடைக்கு வராமல் கருகிவிடுகின்றன. எனவே, கண்மாய்க்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்திடத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். இளையான்குடி தொகுதியில் சுக்கிரபட்டி–வண்டல் சாலை 11 கி.மீ. தூரம் அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 கி.மீ. தூரத்தையும் அகலப்படுத்திடப் பணிவுடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் *1–15*

கிராம ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கும், தெருக் கூட்டுபவர்களுக்கும் தொகுப்பூதியத்தைக் காலமுறை ஊதியமாக மாற்றி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிடத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தர தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை என்பது மிக மிக முக்கியமான ஒரு துறையாகும். இந்தத் துறைக்காக ஏறத்தாழ 13,267 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது அவசியமான ஒன்று. இதை நல்ல முறையிலே நமது அரசு செயல்படுத்தும் என்று நமக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கு உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, உள்ளாட்சித் துறைக்குப் போதுமான நிதியாதாரங்கள் கிடைப்பதில்லை. மற்றொன்று, அமைப்புரீதியாக சில மாறுதல்களைச் செய்யவேண்டிய நிலைமையிலே நாம் இருக்கிறோம். இன்றைக்கு நாம் நிதியாதாரங்களை அவர்களுக்குக் கொடுத்தால்தான் அவர்கள் திறம்படச் செயல்பட முடியும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதேபோல, இன்றைக்கு அதிகாரங்களை அவர்களுக்கு அதிகமாகக் கொடுப்பதைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறோம். அதிகாரங்கள் அதிகமாகத் தேவை என்று தொடர்ந்து பல தடவைகளிலே நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைப் பொறுத்தமட்டில் அதனுடைய அடிப்படையிலே அவர்களுக்கு இன்னும் 29 அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறார்கள். ஆனால், அதிலே சில அதிகாரங்களைக் கொடுக்கும்போது அரசுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அந்தப் பிரச்சினைக்குரிய அதிகாரங்களைத் தவிர்த்துவிட்டு, மீதமிருக்கின்ற அதிகாரங்களை உள்ளாட்சித் துறைக்கு வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், இன்னும் பல ஊராட்சி அமைப்புகளில் இன்னும் பல அதிகாரிகள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். பல இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிரப்புவதற்கு நமது அரசு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளில் இதற்கு முன்பாக இரண்டு அடுக்கு முறை இருந்தது. அப்பொழுது இந்த அமைப்பு சிறப்பாகச் செயல்பட்டது. இன்றைக்கு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தொடர்பு இல்லாத நிலை இருக்கிறது. அதேபோல, ஊராட்சி ஒன்றியத்திற்கும், மாவட்ட அமைப்புக்கும் தொடர்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது. இதை மாற்றியமைத்து, இரண்டு அடுக்கு முறையை நீங்கள் மீண்டும் கொண்டு வர தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஒன்று, பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறதோ, அதைச் செய்ய வேண்டும். இல்லையென்றால், நீங்கள் இப்பொழுது எண்ணுகிறமாதிரி மாறுதல்களை ஏற்படுத்தி, அவர்களுக்குரிய அதிகாரங்களை வழங்க வேண்டும். ஏறத்தாழ 10 ஆண்டுகளாக நாம் இதைப் பரிசீலனையிலேயே வைத்திருக்கிறோம். ஆனால், இதற்குரிய நடவடிக்கையை இன்னும் எடுக்காத நிலை இருக்கிறது. அதை விரைவுபடுத்தி எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது உள்ளாட்சி அமைப்புகளிலே, 'நமக்கு நாமே' திட்டத்திலே மக்கள் மூன்றில் ஒரு பங்கு செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால், இதற்கு முன்பாக நான்கில் ஒரு பங்குதான் மக்கள் பங்காகச் செலுத்தினார்கள். இப்போது மூன்றில் ஒரு பங்கைச் செலுத்தச் சொல்கிறீர்கள். இதை மாற்றியமைத்து—பல கோடிகளை இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்காக இந்த அரசு செலவு செய்து கொண்டிருக்கின்ற நிலையில், இந்த மூன்றில் ஒரு பங்கு என்பதை, நான்கில் ஒரு பங்கு என்று மாற்றிக் கொடுக்க உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், மத்திய அரசு முழுமையாக அதற்குரிய நிதியை வழங்குகிறது. இந்தத் திட்டம் இப்போது தமிழகத்திலே அத்தனை கிராமங்களிலும் சிறப்பாகச் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய நமது அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே முடிந்தால் செய்யக்கூடிய இன்னொன்று, இந்தத் திட்டம் முழுமையாக, ஒரு ஊருணியிலே ஆழப்படுத்தினோம் என்றால், மண் வேலை செய்வதற்கு மாத்திரம்தான் இதிலேயிருந்து நிதி வழங்கப்படுகிறது. அதிலே

அந்த ஊருணிக்கு வரக்கூடிய வழியிலே ஒரு culvert போடவேண்டுமென்றால், அதைச் செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதற்குரிய தொகையை நமது மாநில அரசு ஒதுக்கீடு செய்து, அதுபோன்று தேவை ஏற்படுகின்ற இடத்திலே செய்வதற்கு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது. அந்தத் திட்டங்கள் செய்து முடித்ததற்குப் பிறகு அதற்குத் தொடர்ந்து அதைப் பராமரிக்கின்ற செலவு, உள்ளாட்சி அமைப்புகளிடம் கொடுக்கப்படுகிறது. ஆனால், உள்ளாட்சி அமைப்புகளிலே போதிய நிதி இல்லாத காரணத்தால், அந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றி அமைக்கப் போதிய நிதியினை வழங்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள் பட்டியலை, நீண்ட நாட்களுக்கு முன்பு தயார் செய்யப்பட்ட அந்தப் பட்டியலை நாம் மாற்றியமைக்கவேண்டும். அதிலே இன்னும் பலரை இணைக்கக்கூடிய அளவிலே அந்தப் பட்டியல் தயார் செய்யப்படவேண்டும். அதைத் துரிதமாகச் செய்து கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், இதற்கு முன்பாக ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்த அதிகாரங்கள், படிப்படியாக குறைந்து வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு இருந்த அதிகாரங்களைக் குறைக்காமல், இன்னும் அதிகமாக வழங்குதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்திலே காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஏறத்தாழ 800 கோடி ரூபாய் செலவிலே சிறப்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். நமது துணை முதல்வர் அவர்கள் அதனை ஆரம்பித்து வைத்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மிகப் பெரிய ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறீர்கள். ஆனால், அந்தத் திட்டம்

எல்லா கிராமங்களுக்கும் கிடைக்கப்பெறவேண்டும். அந்தத் திட்டத்திலே பயன்பெற வேண்டிய கிராமங்கள் இன்னும் பல விடுபட்டிருக்கின்றன. அந்தக் கிராமங்களுக்கு உரிய குடிதண்ணீர் வழங்குவதற்கு நமது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனென்றால், அங்கே வேலைசெய்யக்கூடிய அதிகாரிகளை சந்தித்துக் கேட்டால், நாங்கள் இன்னும் அதிக நாட்கள் எடுத்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையிலே இருக்கிறோம். எங்களுக்குப் பல பிரச்சினைகள் அதிலே இருக்கின்றன என்று சொல்கிறார்கள். நான் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் மின்சாரம் போதிய அளவு கிடைப்பதில்லை; மின்சார வெட்டால் எங்களால் முழுமையாகத் தண்ணீர் கொடுக்க முடியவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் குடிதண்ணீருக்கு முழுமையாக ஏன் நீங்கள் மின்சாரத்தை வழங்கக்கூடாது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூர் பகுதிகளிலே கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திருவாடனை எம்.எல்.ஏ., வேலூர்க்காரர்தான் அடிக்கடி அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறாரே? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். உங்களையும் அவர் விடவில்லைபோல் இருக்கிறது.

திரு. கரி. இராமசாமி: செக்கனூர் என்ற இடத்தில் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்திட ரூபாய் 1,800 கோடியிலே திட்டம் தயார் செய்திருப்பதாக நீங்கள் பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறீர்கள். அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அந்தத் திட்டம் எப்போது நடைபெறும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–25

நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் என்னுடைய தொகுதியிலே நகராட்சி என்பது தேவகோட்டை நகரம் இருக்கிறது. அந்த தேவகோட்டை நகரத்தைப் பொறுத்தமட்டில், குடிதண்ணீர்ப்

பிரச்சினை கிடையாது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய pipe line–கள் அத்தனையும் பழமையாக இருப்பதால் சரியாகத் தண்ணீர் வழங்க முடியவில்லை. அதற்குரிய நிதியை அளிக்க, மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய நிதியை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நகராட்சியைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 20 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஒரு நகராட்சியில் 20 பணியிடங்கள் காலியாக இருந்தால் பணிகள் எப்படி நடைபெறும்? நகராட்சி ஆணையர் அங்கே இல்லை. இதுபோன்ற நிலை அங்கே நிலவுகிறது. அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கரி. இராமசாமி, நேரம் ஆகிவிட்டது.

திரு. கரி. இராமசாமி: அதேபோல, சிவகங்கை மாவட்டத்திலே, பல கிராமங்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. சிவகங்கை நகரத்திலேயே குடிதண்ணீர் போதுமான அளவு கிடைக்காத நிலை இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையை எடுத்து முதலிலே நமது அரசு, குடிதண்ணீர் வழங்குவதற்குரிய மின்சாரத்தைத் தங்குதடையின்றி தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கிராமங்களுக்கும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

***திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் நீதி வழுவா நெடுஞ்செழியப் பாண்டியனாக இருக்க வேண்டுமென்று நாங்கள் எல்லோரும் ஆசைப்படுகின்றோம். இந்தச் சட்டப் பேரவையில் நான் பேசுகின்ற பெருவாய்ப்பை எனக்குத் தந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, ஏழைகளின் இதய தெய்வம், நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதம், அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், வருங்காலத் தமிழக முதல்வர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய இதயம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தேனாறு பாயுது, செங்கதிர் சாயுது, ஆனாலும் மக்கள் வயிறு காயுது' என்று சொன்னான் மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இன்னும் ஒரு படி மேலே போய் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கவிஞன் நா. காமராசன் சொன்னார். 'நாட்டில் உள்ள மக்களுக்கெல்லாம் அரை வயிற்றுக் கஞ்சி கிடைக்கட்டும், அதுவரையிலே ஐ.நா. சபையின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கட்டும்' என்றான். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால், இன்னும் நமக்குத் தேவை அதிகமாக இருக்கிறது என்பதைத்தான். இந்த நாட்டு மக்களுக்கு நிறைய செய்துவிட்டோம், இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்று யாராலும் சொல்ல முடியாது. நாடு சுதந்திரம் அடைந்து 63 ஆண்டுகள் ஆகியும், இன்றைக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் 37 சதவிகிதம் பேர், அதாவது 40.21 கோடிப் பேர்கள். ஒரு வேளை சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாதவர்கள் 10 கோடிப் பேர். இதை நான் சொல்லவில்லை. நம் நாட்டின் திட்டக் குழுத் துணைத் தலைவர் மாண்புமிகு மாண்டேக் சிங் அலுவாலியா அவர்கள்தான் கூறியுள்ளார்கள். இதற்காகத்தான் நான் மேற்சொன்ன கவிதையைக் கோடிட்டுக் காட்டினேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் மின் வெட்டு தொழிற்சாலைகளை மட்டும் பாதிக்கவில்லை. கிராம மக்களையும் வாட்டி வதைக்கிறது. இன்றைக்குக் குடிநீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். கிராமங்களில் குழந்தையை ஒரு கையிலும், குடத்தை ஒரு கையிலும் தூக்கிக்கொண்டு மக்கள் அல்லல்படுவதை அன்றாடம் பார்க்க முடிகிறது. 3 மணி நேரம் மின் வெட்டு என்று சொல்லுகிறீர்கள். ஆனால் 6 மணி நேரம் மின் வெட்டு ஏற்படுகிறது. இதனால் குடிநீர் வருவதில் தாமதம் ஏற்படுகிறது. உள்ளாட்சிகளுக்கான குடிநீர் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. நீராதாரங்களில் போதுமான குடிதண்ணீர் இருந்தாலும், மின் வெட்டு காரணமாக விநியோகத்தில் பிரச்சினை இருந்து வருகிறது. நகர்ப்புறங்களில் பத்து நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வருகிறது. கிராமப்புறங்களிலே 15 நாட்களுக்கு ஒரு முறை, 20

நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வருகிறது. பல்வேறு நகராட்சிகளில் குடிநீரும், சாக்கடை நீரும் கலந்து வருகிறது. அந்த மக்கள் சுகாதாரமான குடிநீர் குடிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பில்லூர் திட்டம், கோவை மாவட்டத்தில் பெரும் பகுதி பில்லூர் அணையை ஆதாரமாகக் கொண்ட குடிநீர்த் திட்டத்தில் பயன்பெறுகிறது. இங்கிருந்து கோவை மாநகராட்சியின் கிழக்குப் பகுதியில் 23 பேரூராட்சிகள், 523 கிராம ஊராட்சிகளுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. தா. மலரவன்: ஆனால், இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள நீருந்து நிலையங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இந்த மின்வெட்டால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, மக்கள் தண்ணீருக்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கோவை மாநகராட்சிக்கு இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டம், கோவை மாநகர எதிர்கால வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது போடப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நீங்கள் பேக்கேஜ் டெண்டர் வைத்ததால், நான்காண்டு காலமாகியும் அந்த வேலை 50 சதவிகிதம்கூட முடியவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் மாலை நேரத்தில் ஆம்னி பேருந்துகள் சாலைகளில் நிறுத்தி போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, கோவை காந்திபுரத்தில் ஆம்னி பேருந்துகளுக்கென தனியாக ஒரு பேருந்து நிலையத்தை உருவாக்கினோம். வேலையே முடியாமல் நீங்கள் அவசரமாகத் திறந்து வைத்தீர்கள். இன்னும் அந்தப் பேருந்து நிலையத்திற்கு மேற்கூரைகூட அமைக்கப்படவில்லை.

கோவையைப் பொறுத்தவரை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்தான் எல்லாத் திட்டங்களும் போடப்பட்டனவே தவிர, நீங்கள் எதையுமே செய்யவில்லை. மேட்டுப்பாளையம் சாலையில் கட்டப்பட்டு வரும் பேருந்து

நிலையம், உக்கடம் மீன் அங்காடி, பழ அங்காடி, மலர் அங்காடி ஆகிய அனைத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டது. நீங்கள் ஆட்சிக்கு வந்த நான்காண்டு காலத்தில் கோவை மக்களுக்கு எந்தத் திட்டத்தையும் வழங்கவில்லை. கோவையில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் மிகவும் மோசமாக உள்ளது. மக்கும் குப்பை, மக்காத குப்பைக்கென்று ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு குப்பைத் தொட்டிகள் வழங்குகிறோம் என்று சொல்லி, 10 வார்டுகளுக்கு மட்டும் வழங்கினார்கள். மற்ற வார்டுகளில் உள்ள மக்களுக்கு வழங்கவில்லை. ஆனால், எல்லா வார்டுகளுக்கும் வழங்கியதாகக் கணக்குக் காட்டினார்கள்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்றான் வான்புகழ் வள்ளுவன். செய்த தவறுகளைச் சொல்ல வேண்டும், சுட்டிக்காட்ட வேண்டும் என்றுதான் வள்ளுவப் பெருமான் சொல்கிறார். ஆகவே, நாங்கள் இடித்துச் சொல்லவில்லை. நீங்கள் கொடுத்த கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்துத்தான் நாங்கள் சொல்கிறோம்.

2006–2007 ஆம் ஆண்டில் நீங்கள் கொடுத்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் "கோவை மாநகராட்சி எல்லையில் ஓடும் சங்கனூர்பள்ளம் கால்வாய் தூய்மைப்படுத்தப்பட்டு, மாசற்ற கால்வாயாக ஆக்கப்படும். அதில் சிமெண்ட் கான்கிரீட் தளமும், சிறு வடிகால்களும் அமைக்கப்படுவதோடு, கரைகளும் அமைக்கப்பட்டு, அமர்வதற்காக இருக்கை வசதி செய்து கொடுத்து, அதன்மூலம் பொது மக்களுக்குப் பொழுதுபோக்கு இடமாக அது மாற்றியமைக்கப்பட உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால், அதற்கு இன்று வரை வரைபடம்கூடத் தயாரிக்கப்படவில்லை. இப்படி, கவர்ச்சியான திட்டங்களைச் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நான்காண்டு காலமாகியும் இந்தத் திட்டத்தை இன்னும் தொடங்கவேயில்லை.

திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தினீர்கள். அந்த மக்கள் நகராட்சித் தலைவருக்குத்தான் வாக்களித்தார்களேதவிர, மேயருக்கு வாக்களிக்கவில்லை. ஆனால், நீங்கள் ஜனநாயகத்தை மதிக்காமல்,

அந்த நகராட்சித் தலைவர்களையே மேயராக ஆக்கினீர்கள். அதிகாரம் இருக்கிறது என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்யக்கூடாது. நியாயத்தையும், நல்லதையுமே செய்ய வேண்டும்.

"சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள கூவம் போன்ற ஆறுகளைச் சுத்தப்படுத்திச் சீரமைப்பதற்காக சென்னை நதி நீர் அறக்கட்டளை ஒன்றினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. வெளிநாடுகளில் உள்ளதுபோன்று, புறநகர்ப் பகுதிகளில் உள்ள ஆற்றுப் பகுதிகளை, தூய்மையான திட்டங்களை வகுத்து இந்த அறக்கட்டளை செயல்படுத்தும்" என்று ஆளுநர் உரையில் கூறியுள்ளீர்கள். கோவையில் உள்ள சிறிய கால்வாய்களைச் சீரமைப்பதற்கே முடியவில்லை; ஆனால், நீங்கள் கூவம் நதியைச் சீர்படுத்த முயற்சிககிறீர்கள்.

1973 ஆம் ஆண்டு இன்றைய மாண்புமிகு முதலமைச்சர்தான் அன்றைக்கும் முதலமைச்சர். அவர்கள் கூவத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுத்தார்கள். கூவத்தை அழகுபடுத்தி, அதில் படகுத் துறையெல்லாம் கட்டி, அந்தப் படகுத் துறைக்கெல்லாம் புலவர்கள், மன்னர்கள் பெயர்களைச் சூட்டினார்கள். படகு விடும் விழா நடத்தப்பட்டது. அந்தப் படகில் பயணம் செய்த, அன்றைய இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேதாசலம் அவர்கள் கூவத்திலே விழுந்தார்கள். அதன் பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. நான் எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், அன்றைக்கே முடியாத அந்தத் திட்டத்தை இன்றைக்கு நீங்கள் எடுத்துக் கொண்டு வந்து, நாட்டு மக்களின் வரிப் பணத்தை வீணடிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 1,77,667 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 2,11,356 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கியுள்ளதாகக் கூறியுள்ளீர்கள். ஆனால், கோவை மேற்கு தொகுதியில் ஒருவருக்குக்கூட வழங்கவில்லை. யாராவது ஒருவருக்கு கோவை மேற்கு தொகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் செம்மொழி மாநாடு நடத்துகிறீர்கள். அந்தச் செம்மொழி மாநாடு வெற்றியடைய வேண்டும் என்பதற்காக ஆலயங்களில் இலட்சார்ச்சனை நடத்தப்படுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மேற்கு தொகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் எங்கே இருக்கிறது? எல்லாம் நகர்ப்புறம். நகர்ப்புறத்திலே இரண்டு ஏக்கர் என்றால், ஒரு ஏக்கர் இருபது கோடி ரூபாய் பெறும். புறம்போக்கு இடங்களில்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை உணர்ந்து பேசவேண்டும். (குறுக்கீடு)

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவையிலே எந்தத் திட்டத்தையும் நீங்கள் செயல்படுத்தவில்லை. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் செய்யப்பட்டதாகக் கூறினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபொழுது, ஒண்டிப்புதூரிலே ஒரு சாலை மேம்பாலம் அமைப்பதற்காக 2000 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அதற்குப் பிறகு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோருகிற நிலையில் தேர்தல் வந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அதேபோல, கோவை புறவழிச் சாலையிலே உக்கடம் பகுதியிலே வாலாங்குளம் மேம்பாலம் என்று அழைக்கப்படும் ஒரு சாலை மேம்பாலம். அதுவும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுது தொடங்கப்பட்டு, மீண்டும் இப்பொழுது ஆட்சிக்கு வந்த பிறகுதான் அது திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதுபற்றிக்கூட நம்முடைய மாண்புமிகு அ.தி.மு.க.வினுடைய உறுப்பினர்களெல்லாம் பல முறை இங்கே சட்டமன்றத்திலேகூட கேள்விகள் கேட்டார்கள்.

அதேபோல, உப்பிலிபாளையம் பாலம் என்கிற பாலம் மிக முக்கியமான பாலம் ஆகும். எப்படி சென்னை அண்ணா சாலையில் ஒரு அண்ணா மேம்பாலம் அமைக்கப்பட்டதோ, அதைப்போல கோவை மாநகரத்தினுடைய மையப் பகுதியிலே, அதுவும் தலைவர்

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அம்மேம்பாலம் அமைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கோவை மருத்துவக் கல்லூரி அருகிலே, இப்பொழுது உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடக்க இருக்கக்கூடிய இடத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய அந்த Hope College இரயில்வே மேம்பாலம் மிகக் குறுகிய பாலமாக இருந்தது. அதுவும் இப்பொழுது மூன்று வழித் தடமாக அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு மூன்று வழித் தடம் அமைப்பதற்கு இரயில்வே துறையின் அனுமதி பெற்று, அந்தப் பணியும் நடைபெற்று வருகிறது. எனவே, இதுபோன்ற பணிகள் கோவையில் எப்போதெல்லாம் நடந்திருக்கின்றன என்று சொன்னால், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்களோ, அப்பொழுதுதான் அனைத்து மேம்பாலப் பணிகளும் நடந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) இவரும் மேயராக இருந்தாரேயொழிய, பத்திரிகையிலே செய்திதான் வந்ததேயொழிய, எந்தப் பணியும் நடக்கவில்லை என்பதைப் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், எல்லாமே எங்களுடைய தலைவருடைய ஆட்சியிலேதான் நடக்கிறது என்று சொன்னார்கள். உங்களுடைய தலைவருடைய ஆட்சியிலேதான் அவினாசி ரோட்டிலே ஒரு மேம்பாலத்தைக் கட்டினீர்கள். ஆனால், இன்றைக்கு மழை வந்தால் அந்த மேம்பாலத்திலே யாருமே போக முடியாது. கீழே போகக்கூடியவர்கள் யாருமே போக முடியாத அளவிற்கு அங்கே தண்ணீர் தேங்கியிருக்கிறது. அதற்கு இதுவரையில் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, நான் உங்களைக் கேட்டுக்கொள்வது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில்

துறை அமைச்சர் அவர்களும், அங்கிருக்கக்கூடிய மாண்புமிகு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அண்ணன் இராமநாதன் என்னிடத்திலே கூறியவுடன் கோவை அவினாசி சாலை மேம்பாலத்தினை நான் நேரடியாக ஆய்வு செய்து, அங்கிருக்கக்கூடிய தண்ணீர் அப்புறப்படுத்தப்பட்டு, இப்பொழுது அந்தப் பாலத்தினுடைய கீழ்ப் பகுதியிலும் பொது மக்கள் வாகனங்களில் பயணம் செல்கிறார்கள்.

இன்னும்கூட ஒரு பாலத்தை நான் விட்டுவிட்டேன். கோவையில் வடகோவை என்கிற இடத்தில் இரயில்வே மேம்பாலமும் மிகப் பெரிய பாலமாக தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அமைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே செம்மொழி மாநாடு நடத்துகிறீர்கள். அந்த செம்மொழி மாநாடு வெற்றியடைய வேண்டும் என்பதற்காக ஆலயங்களில் இலட்சார்ச்சனை நடத்தப்படுகிறது. ஒரு காரியம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக ஆண்டவனை வேண்டுவதில் தவறில்லை. ஆனால், உங்களுக்கு பயம் வந்துவிட்டது.

1976 ஆம் ஆண்டு கோவையிலே காந்தி இர்வின் ஸ்டேடியத்தை இடித்துவிட்டு, சிதம்பரம் பூங்காவிலே மாநாடு போட்டீர்கள். அந்த மாநாடு முடிந்ததும் உங்கள் ஆட்சி கலைக்கப்பட்டது. அதேபோலத்தான் இந்த மாநாடு முடிந்ததும் ஆட்சி பறிபோய் விடுமோ என்ற பயத்தில்தான் ஆலயங்களில் இலட்சார்ச்சனை செய்கிறீர்கள். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்' என்று புலவர் பெருமக்கள் பாடியிருக்கின்றார்கள். ஆகவே, தமிழ் என்றைக்கும் செம்மொழிதான்.

இன்றைக்கு மேலவையை மீண்டும் கொண்டு வருகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் இந்த அரசு எப்பொழுதுமே இலட்சார்ச்சனை செய்ததில்லை. தனியார்கள் அவர்களுடைய நம்பிக்கையின் அடிப்படையிலே செய்தார்கள். இதைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மலரவன், தொடர்ந்து பேசுங்கள்.

திரு. தா. மலரவன்: நான் கொச்சைப்படுத்தவில்லை. நடந்ததைத்தான் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மலரவன், உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 10 நிமிடங்கள்தான். நீங்கள் 11 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பது கலைஞர் ஆட்சி. இது பகுத்தறிவுத் தந்தை பெரியாருடைய வழியிலே நடைபெறுகிற ஆட்சி. இந்த ஆட்சியிலே ஆலயங்களுக்கெல்லாம் போக வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் ஆட்சி நடத்துகிறபொழுது, அரசுக் கட்டடத்திற்கு நீங்கள் பூமி பூஜை போட்டு, ஐயரை வைத்து நடத்திக் கொண்டிருந்த நீங்கள் போய் இப்பொழுது ஆலயத்தைப் பற்றியெல்லாம் பேசுவது என்பது வேடிக்கையான ஒன்றாக இருக்கிறது.

திரு. தா. மலரவன்: சேலம் மாநகராட்சியிலே கிடா வெட்டி, இரத்தத்தைத் தெளித்த விவகாரத்தை நாட்டு மக்கள் யாரும் மறந்துவிடவில்லை, நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மேலவையைக் கொண்டு வருகிறீர்கள். மேலவையைக் கொண்டு வந்தால், இந்த நாட்டு மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? வேண்டுமானால் உங்கள் கட்சியிலே பதவி இல்லாமலிருப்பவர்களுக்குப் பதவி கொடுத்து, அவர்களைத் திருப்திப்படுத்தலாமே தவிர, அதனால் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

2009–2010 கொள்கை விளக்கக் குறிப்பில், கோவை அம்மன்குளத்தில் 1,608 வீடுகள் கட்ட ரூ.41.03 கோடியில் மதிப்பிடப்பட்டுள்ளதாக் கூறியுள்ளீர்கள். ஆனால், குடிசை மாற்று வாரிய 2010–2011 ஆண்டிற்கான செயலாக்கக் குறிப்பில், 936 வீடுகள் கட்ட 31.90 கோடி என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஏன் இந்த முரண்பாடு என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளைக்காரன் காலத்தில் கட்டிய பல்வேறு கட்டடங்கள் இன்றைக்கும் சிறப்பாக உள்ளன. 150 ஆண்டுகளைக் கடந்து, பொதுப் பணித் துறை அலுவலகம் இன்றைக்கும் மெரினா கடற்கரையைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நீங்கள் இன்றைக்குக் கோவை அம்மன்குளத்திலே கட்டிய கட்டடம் பல்லிளித்துக் கொண்டு பூமியிலே புதைந்து கொண்டிருக்கிறது. ரூ.40 கோடி நாட்டு மக்களுடைய வரிப் பணம் பாழாக்கப்பட்டுள்ளது. இதற்கு யார் பொறுப்பேற்பது?

பிற்பகல் 1–40

கோவை மாநகராட்சியில் எந்த வேலையும் நடைபெறவில்லை. ஆனால், அன்றாடம் பத்திரிகையில் ஜவகர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை. உண்மையில் கோவை மாநகராட்சிக்கு ஜவகர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? மாநகராட்சியின் பங்கு எவ்வளவு செலுத்தப்பட்டுள்ளது? அரசின் பங்குத் தொகை செலுத்தப்பட்டுவிட்டதா என்ற முழு விவரத்தை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், கிராமப்புறத்தின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவில் தொழிற்சாலை நடத்த முன்வருபவர்களுக்கு 25 சதவிகித மானியம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இது கிராமத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு கொண்டு வரப்பட்ட திட்டம். அண்ணல் காந்தியடிகள், கிராமத்தின் வளர்ச்சிதான் ஒரு நாட்டின்

வளர்ச்சி என்றார். அவருடைய எண்ணத்தைச் செயல்படுத்தும் விதத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியிருந்தால், கிராமத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும். கிராமப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்திருக்கும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால் நீங்கள் கிடப்பில் போட்டுவிட்டீர்கள். இந்த அற்புதமான திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்து மாணவ, மாணவியர்கள் உயர் கல்வித் துறையில் வளர வேண்டும் என்பதற்காகத்தான் எங்கள் அம்மா சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எல்லா கிராமங்களிலும் பேருந்து வசதியில்லை. அதனால் அவர்கள் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலை இருந்தது. கிராமப்புற மாணவ, மாணவிகளை நினைவில் வைத்துத்தான், கிராமத்து மக்களின் முன்னேற்றத்தை மனதில் வைத்துத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

கோவையில் உள்ள போக்குவரத்து நெரிசலைச் சரி செய்வதற்கு காந்திபுரம் 100 அடி ரோடு சந்திப்பு, காந்திபுரம் கிராஸ் கட் ரோடு சந்திப்பு, அவினாசி ரோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மலரவன், உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 10 நிமிடங்கள். நீங்கள் 14 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

திரு. தா. மலரவன்: கிருஷ்ணம்மாள் கல்லூரி சந்திப்பு, அவினாசி ரோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. தா. மலரவன்: தண்ணீர்ப் பந்தல் ரோடு சந்திப்பு, சிங்கேகவுடர் வீதி, மில் ரோடு சந்திப்பு, மேட்டுப்பாளையம் ரோடு—காமராஜபுரம் சந்திப்பு, மேட்டுப்பாளையம் ரோடு—அவினாசிலிங்கம் கல்லூரி சந்திப்பு ஆகிய இடங்களில் மக்கள் நலனில் அக்கறை கொண்டு அங்கு பாலங்கள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் புதுக்கோட்டை நகராட்சியில் நிதிநிலை அறிக்கையே இதுவரை

கொண்டு வரவில்லை. அங்கே நிதிநிலை அறிக்கை கொண்டுவராமல், எப்படி அங்கேயிருக்கக்கூடிய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பது? அந்த மக்களுக்கு எப்படித் திட்டங்களை நிறைவேற்றுவது என்பதை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எல்லா பஸ் நிலையங்களிலும் ஆளும் கட்சிப் பிரமுகர்கள் பஸ் நிலையங்களை ஆக்கிரமித்து, கடை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கோவையிலும் அப்படித்தான் இருக்கிறது, உசிலம்பட்டியிலும் அப்படித்தான் இருக்கிறது. பெரும்பாலான இடங்களில் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, நான் உங்களை கேட்டுக்கொள்வது, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவை அங்கீகரிப்பதற்கு மேலும் அவகாசம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கட்டட அனுமதி வழங்கும் திட்டத்தை எளிமைப்படுத்த வேண்டும். இன்றைக்கு அந்தத் திட்டம் மாநகராட்சிக்கு வந்து, L.P.A.-க்குச் சென்று, அதற்குப் பிறகு Director of Town Planning-க்குப் போக வேண்டுமென்று சொல்லுவதால்தான் இன்றைக்கு நிறையக் கட்டடங்கள் அனுமதியில்லாமல் கட்டப்படுகின்றன. ஆகவே, அதை எளிமையான முறையில் கொண்டு வருவதற்குத் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திடக் கழிவு மேலாண்மை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் 26–4–2010 திங்கட்கிழமை அன்றும் தொடரும். (குறுக்கீடு) நீங்கள் முடிக்க மாட்டேன் என்கிறீர்கள். உங்களுக்கு ஒதுக்கியது 10 நிமிடங்கள். ஆனால், நீங்கள் 15 நிமிடங்களுக்குமேல் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. தா. மலரவன்: திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.168 கோடி ஒதுக்கப்பட்டது. கொங்கு மண்டலம் என்றைக்கும் எங்கள் அம்மாவின் கோட்டை, நீங்கள் எந்த மாநாடு போட்டாலும்

அதை மாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (26–4–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

73. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

74. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்திறன் பற்றியக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

75. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

76. "நான்கு ஆண்டுகள் (2006–2010) கலைஞர் ஆட்சியில் உயர் கல்வியின் உன்னத வளர்ச்சி" என்கிற சிறுநூல். (தமிழ்)

77. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2010–2011. (தமிழ்)